விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 31 வெள்ளிக்கிழமை (16.09.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 271

ராம்கோ

MADRAS CEMENTS LTD

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது

RAMCO CEMENT

சீமெந்து

# சமாதான பேச்சில் புலிகளை இணைக்க சர்வதேசத்தின் ஒத்துழைப்பு அவசியம்

## நியூயோர்க்கில் ஜனாதிபதி தெரிவிப்பு

(நியூயோர்க்)

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண் பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால் அம் முயற்சிகள் பயனளிக்கவில்லை இந்நிலையில் விடுதலைப்புலிகளுடனான சமாதானப்பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் தற்போது தேவையாகவுள்ளது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)



தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி அவரின் உருவப்படத்திற்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தீபமேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

## வரவு செலவுத்திட்டம் மூலம் அரசு எல்லை மீறிச்செல்கிறது

### சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டத்தினால் வரையறுக்கப்பட்ட எல்லைகளை இலங்கை அரசு மீறிச் செல்வதாகவும் எரிபொருள் போன்றவற்றுக்கான மானியங்களை கட்டுப்படுத்துவதற்கு கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை செய்துள்ளது.

ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைகளை விடஅதிகமாக மானியங்களுக்கு நிதி செலவிடுவதாகவும் அதேவேளை உள்நாட்டு வரி வருமானங்களை வசூல் செய்ய தவறிவருவதாகவும் குறிப்பாக சுங்கத்தீர்வைகள் மதுபானம், புகையிலை போன்றவற்றின் மீதான வரிகள் எதிர்பார்ப்புக்களை எட்டவில்லையென்றும் நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுவரை சுனாமி நிவாரணமாக 200 மில்லியன் டொலர்கள் செலவாகியுள்ளது. வரவு செலவு திட்ட ஒதுக்கீடுகளுக்கு புறம்பாக செய்யப்படும் செலவீனங்கள் பணவீக்கத்தை அதிகமாக்குகின்றன.

தேர்தல் வரவிருப்பதை முன்னிட்டு எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்க அரசு மறுத்து வருவதால் 200மில்லியன் டொலர்களை மானியமாக வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.தனது 73 பக்க அறிக்கையில் நிதியம், தடைப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைக்களை முன்னெடுக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளது. (ச-6)

## ஜனாதிபத்தேர்தலில் வாக்களிக்க யாழில் ஏழு இலட்சம் பேர் தகுதி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் இருந்து 7லட்சத்து 1,938 பேர் தகுதி பெற்றிருப்பதாக யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.யாழ். மாவட்டத்தில் 11 தொகுதிகளில் 624 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

யாழில் தேர்தலுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் இறந்தவர்கள்.ஆழிப்பேரலைத் தாக்கத்தால் இறந்தவர்களின் விபரங்கள் திரப்பட்ட பின்னரே யாழ்ப்பாண மாவட்டத்தில் 701,938 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக கூறப்பட்டது.

இதேவேளை நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர் வாக்களிப்பதற்காக வாக்காளர் அட்டைகள் வவுனியாவில் உள்ள வன்னி தேர்தல் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ் வாக்காளர் அட்டைகள் வவுனியா மாவட்டத்தில் உள்ள 14 ஆயிரத்து 884 வாக்காளர்களுக்கும் மன்னார் மாவட்டத்தில் 78ஆயிரத்து 906 வாக்காளர்களுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 66 ஆயிரத்து 596வாக்காளர்களுக்குமாக பிரிக்கப்பட்ட வாக்காளர் அட்டைகள் எழுதும் பணி நடைபெற்று வருகின்றது. (ச)

## சமூகசீரழிவில் ஈடுபடுவோருக்கு எல்லாளன் படை எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சமூக சீரழிவுகளை அரங்கேற்றும் துரோகிகளுக்கு எல்லாளன் படை கடும் நடவடிக்கை எடுக்குமென எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மை நாட்களாக யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வந்துள்ள சமூதாய சீரழிவு நடவடிக்கைகள் அனைவரையும் வெட்கித்தலை குனிய வைத்துள்ளது.

இதனால் மிகுந்த மனவேதனையும் கொதிப்பும் அடைந்துள்ளோம். பல்லாயிரம் உயிர்களை விலையாகச் செலுத்தி எமது தலைமுறை கட்டியெழுப்பி வரும் அற்புதமான அழகிய எமது தேசத்தை அவமானப்படுத்தும் இத்தகைய கீழ்த்தரமான செயற்பாடுகள் தொடர்பில் மிகுந்த தீவிரமான நடவடிக்கைகளில் இறங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

அதனால் நீதிக்கான வேட்டுக்களை எமது துப்பாக்கி உமிழ்வதற்கு முன்னர் சில வார்த்தைகள் உரியவர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம் என எல்லாளன் படை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரலாற்றுக் காலம் முதல் வீரர்களாய், விவேகர்களாய்,ஒழுக்க சீலர்களாய் புகழோடு வந்த எமது இனம் ஏன்வெறுங்கையோடு எல்லாவற்றையும் இழந்து நிர்க்கதியாய் நின்றது?

இவ்வாறானதொரு நிலையில் எம்மை மீண்டும் வீழ்த்துவதற்கு வக்கற்ற ,வழியற்ற உதிரிகள் மீண்டும் எம்மிடையே அதிகாரங்களையும் பிரிவினைகளையும் ஆரோக்கியமற்ற அசிங்கங்களையும் தோற்றுவிக்கும் கீழ்த்தனமான முயற்சியில் நன்கு திட்டமிட்டு இறங்கியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் மட்டுமல்ல, தமிழீழத்தின் அனைத்து (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952-3, 011-2360290,011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உள்ளூராட்சி வார சிறந்த தெரிவுகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் உளளூராட்சிவார விழாவினை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூகங்களிற்கிடையே நடாத்தப்பட்ட சிறந்த நடவடிக்கைகள் சம்பந்தமான போட்டியில் கெருடாவில் சாவகச்சேரி திருக்குமரன் சனசமூக நிலையம் சிறந்த சன சமூக நிலைமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

கற்குழி பாரதி சனசமூகநிலையம், சர்வசாதனசங்க சனசமூக நிலையம் என்பன முறையே 2ஆம் 3ஆம் இடங்களைப் பெற்றுள்ளன.

நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள தேனீரகம், குளிர்களி சுகம், உணவகம், வெதுப்பகம் ஆகியவற்றுக்கு இடையே நடாத்தப்பட்ட போட்டியில் சிறந்த தேனீரகமாக மீசாலை மோகன் தேனீரகமும், சிறந்த குளிர்களி அகமாக கபி குளிர் களி அகமும் சிறந்த உணவகமாக மருதம் உணவகமும் சிறந்த வெதுப்பகமாக 'பைந்தமிழ்' வெதுப்பகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றிற்கான பரிசுகள் நகர சபையால் நடாத்தப்படும் உளளூராட்சி விழாவன்று வழங்கப்படவுள்ளன. (ற-47)

## இந்தியாவின் தலையீட்டுடனேயே இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு

### பிரபாகரனுடனும் பேசுவது உறுதி என்கிறார் பிரதமர்

இந்தியா இல்லாமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நாங்கள் இறுதித் தீர்வை உருவாக்க முடியாது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்தி ஸ்தாபனமான ரொய்ட்டருக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தென்னிலங்கையின் ஏகமனதான ஆதரவு இல்லாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இயலாது. நான் ஜனாதிபதியானால் அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குவேன்.

பெரும்பான்மை சிங்கள மக்கள் திருப்தி அடையும் வகையிலான தீர்வைத்தான் உருவாக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் உணர வேண்டும். சிங்கள மக்களின் உதவியில்லாமல் நாங்கள் நகரமுடியாது. பொறுப்பு அனைத்துக கட்சிகளுக்கும் உண்டு. எனவே, அனைத்து தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடன் இணைந்தே இந்த அமைதி முயற்சியை மேற்கொள்ள இது ஒரு புதிய அணுகு முறை.

ஜே.வி.பி.ஹெல உறுமய, சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் ஆதரவை என்னால் பெற்றுவிட முடியும் ஆனால் ஐக்கிய தேசியக்கட்சி தான் விலகிச் செல்லக் கூடும். அதனால் அவர்களது ஒத்துழைப்பை கண்டிப்பாக பெறுவோம்.

அனைவரும் இணைந்து புதிய அரசு உருவாக்குவதா, தனித்து ஆட்சி அமைத்து அமைதி முயற்சிகளில் ஆதரவளிப்பதா? என்பது குறித்து விவாதித்து முடிவெடுப்போம்.

இனப்பிரச்சினையில் இந்தியாவின் தலையீடு இல்லாமல் நாங்கள் இறுதித் தீர்வை மேற்கொள்ள முடியாது இது உறுதியானது உண்மையானது அவர்களது ஒத்துழைப்பு மிக அவசியம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுக்களை நடாத்த வேண்டும் என்று நான் சொல்வது நடைமுறை சாத்தியமானது. அனைவரும் சமரச முயற்சிகளை நோக்கி நகர்ந்துள்ளோம். நாங்கள் இறுதித் தீர்வுக்காக செயற்படுகிறோம் ஏன் எங்களால் முடியாது? என அவர் கேள்வி எழுப்பினார். (ச.4)

## பட்டதாரி நியமனத்தில் புறக்கணிப்பு; இசை, நாட்டிய கலைமணி பட்டதாரிகள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

தொழில் வாய்ப்பற்ற யாழ்.பல்கலைக்கழக இசைக் கலைமணி, நாட்டியக் கலைமணிச் சங்கத்தினால் கடந்த திங்கட்கிழமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் விசாரணை அதிகாரி சுரேந்திரராஜாவிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

தமக்கு உரிய தீர்வை பெற்றுத் தரும்படி வலியுறுத்தி பாதிக்கப்பட்ட 65ற்கு மேற்பட்டவர்கள் ஒன்று திரண்டு இம் மகஜரை வழங்கினர்.

இம் மகஜரின் விபரம் வருமாறு,

வேலையற்ற பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் உள்வாங்குதற்காக சென்ற மாதம் நடைபெற்ற நேர்முகப்பரீட்சையிலிருந்து டிப்ளோமா (இசைக்கலைமணி, நாட்டியக் கலைமணி) பட்டதாரிகளாகிய நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளமை மிக மனவேதனை தருகிறது.

யாழ்.பல்கலைக்கழக இசை நடனப் பட்டதாரிகளுக்கு ஏனைய பட்டதாரிகள் போன்று பல்கலைக் கழகம் தொடங்கிய காலம் முதல் 1999ஆம் ஆண்டுவரை இலங்கைக் கல்விச் சேவையினால் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், 2000ஆம் ஆண்டிலிருந்து இப்பட்டம் பெற்றவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை பெரும் மனத்தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

இவ் டிப்ளோமா பட்டம் ஆனது ஏனைய பட்டங்களுக்கு (டிகிரி) சமமானது என பல்கலைக்கழக துணை வேந்தரினால் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டும் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். எனவே, இதற்கான நியாயமான தீர்வை பெற்றுத் தரும்படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம் என கையளிக்கப்பட்டுள்ள அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-19)

## வீதி அமைக்க கோரிக்கை

தென்மராட்சி-சரசாலைப் பகுதியில் மிகவும் பின்தங்கியதொரு கிராமமாகக் காணப்படும் கோணாவளைக்கு தனியானதொரு வீதி அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வீதியை அமைப்பது தொடர்பில் நீண்டகாலமாக நிலவி வரும் சமூகச்சிக்கலைக் களைந்து விரைவாக வீதி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் தமது கோரிக்கையில் கேட்டுள்ளனர்.

சுமார் 25குடும்பங்களைக் கொண்டிருக்கும் கோணவளைக் கிராமத்திற்கு 50 வருடங்களுக்கு மேலாக வீதி இல்லாத பிரச்சினை இருந்து வருகின்றது. வயல்வெளிப் பாதையொன்றையே இம்மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இப்பகுதிக்கு வீதி அமைப்பதற்கு கடந்த வருடம் என்.ரவிராஜ் எம்.பி.எடுத்த நடவடிக்கைகள் பலரின் எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட்டதாகத் தெரியவருகின்றது. (ற-49)

## இராசி பலன்

16.09.2005
(ஆவணி 31, வெள்ளிக்கிழமை)
திரயோதசி பிற்பகல் 1.04 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 3.35 மணிவரை
இராகுகாலம்10.33-12.03 மணிவரை
சுபநேரம்6.03-7.33 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கை கூடும், பெருமையடைதல், புதிய விடயம், தன வருவாய். |
| இடபம் | அதிகாரம், முயற்சி கை கூடும், தனவரவு, பிறர் உதவி. |
| மிதுனம் | பிரயாணம், தந்தை வழி உறவு, முயற்சி தாமதம், பணவிரயம். |
| கடகம் | மனக்கிலேசம், காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, அபகீர்த்தி. |
| சிங்கம் | களஸ்திர நன்மை, செல்வாக்கு, முயற்சி கை கூடும், பொருள் சேர்கை. |
| கன்னி | காரிய நன்மை, ஆரோக்கியம், பொருள் சேர்க்கை, தெய்வதரிசனம். |
| துலாம் | குடும்பக் கவலை, பணவிரயம், முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு. |
| விருச்சிகம் | தாய்வழி உறவு, முயற்சி தாமதம், தனவிரயம், மனப்பதட்டம். |
| தனுசு | கூட்டுமுயற்சி, தனவரவு, கீர்த்தி, போசன சுகம். |
| மகரம் | விவாதம், காரியதடங்கல், தனவிரயம், தெய்வசிந்தை. |
| கும்பம் | கற்பனை மிகுதி, முயற்சி கைகூடும், போசன சுகம், நண்பர்களின் சந்திப்பு. |
| மீனம் | காரிய அலைச்சல், சுப செலவு, உறவினர் வெறுப்பு, தெய்வசிந்தை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## புதுக்கடை நீதிமன்றத்தில் தமிழ்ப்பெண் ஒருவர் கைது

புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தினுள் சந்தேகத்கிடதான வகையில் நடமாடியதாகத் தெரிவித்து தமிழ்ப் பெண் ஒருவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் முத்துலிங்கம் காந்திமதி என்பவராவார் என பொலிஸார் தெரிவித்தனர்.

புதுக்கடை மூன்றாவது நீதவான் நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணியைப் போல நடமாடியதாக ஏனைய சட்டத்தரணிகள் பொலிஸாரிற்கு முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போது அவர் தன்னைப்பற்றிய அடையாளங்களை உரியவகையில் நிரூபிக்கத் தவறியுள்ளதுடன் அவரிடமிருந்து மூன்று அடையாள அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளுக்காக சந்தேக நபரான முத்துலிங்கம் காந்திமதி வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (ற-4)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் கீழ் இருக்கும் தேசிய கல்வியற்கல்லூரி, ஆசிரிய கல்வி நிறுவகம் மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்களில் ஆசிரிய கல்வியியலாளர் சேவையின் 3ஆம் வகுப்பில் வெற்றிடங்களை நிரப்புதவதற்காக கல்வி அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொழிற்திறன் பாடம், முதலாம் மொழி (சிங்களம்), முதலாம் மொழி (தமிழ்), இரண்டாம் மொழி (சிங்களம்) இரண்டாம் மொழி (தமிழ்), இரண்டாம் மொழி (ஆங்கிலம்), சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் மற்றும் நடனக்கலை, விளையாட்டு மற்றும் உடற்கல்வி, விவசாயம், ஆரம்பக்கல்வி, ஆரம்பக்கணிதம், விஞ்ஞானம், கணிதம் விசேட கல்வி பௌத்தசமயம், கிறிஸ்தவ சமயம், இந்துசமயம், தகவல் தொழில் நுட்பம், இயந்திரத் தொழில் நுட்பம், நிர்மாணத் தொழில்நுட்பம், கலை மின் இலத்திரனியல் தொழில் நுட்பம், உணவு தொழில் நுட்பம், நூலக மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல வேண்டும், 2005.09.26ஆம் திகதி அன்று 22 முதல 35வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். மற்றும் தெரிவு செய்யப்படும் பாடத்திற்கேற்ப கல்வித் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர் வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கல்வி அமைச்சு, இசுறுபாய, எபலவத்தை, பத்தர முல்லை. என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இவ் விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்களை இம்மாதம் 9ஆம் திகதி வெளியான வர்த்தகமானியில் பார்வையிடலாம். (ற-19)

## இரு பிரதான வேட்பாளர்களுடன் மீண்டும் மு.கா. ஆலோசனை

ஜனாதித்தேர்தல் தொடர்பிலான இறுதி முடிவை எடுப்பதற்கு முன்னர் பிரதான கட்சிகளின் இரு வேட்பாளர்களையும் அடுத்த வராம் மீண்டும் ஒரு தடவை உத்தியோக பூர்வமாக சந்திப்பதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மாணித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் கே.ஏ.பாயிஸ் கூறியதாவது,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எமது கட்சி உறுப்பினர்களின் கருத்துக்கள் முழுமையாக அறிந்து முடிக்கப்படவில்லை. எதிர்வரும் 18ஆம் திகதி எங்கள் கட்சியின் மாகாண மற்றும் உளளூராட்சி மன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெறவுள்ளது.

அதன்போது அவர்களினது கருத்துக்கள் கேட்டறியப்படும் கட்சியின் நிலைப்பாடு பற்றி இதுவரை தீர்மானமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

கட்சியினரின் நிலை அறிந்த பிறகு சுதந்திரக்கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவையும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில விகிரமசிங்கவையும் எதிர்வரும் 18ஆம் திகதிக்குப் பின் மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த உள்ளோம்.

இரு பிரதான கட்சிகளினதும் வேட்பாளரை உத்தியோக பற்றற்ற முறையில் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவ்விரு வேட்பாளரையும் உத்தியோகபூர்வமாக சந்தித்த பின்னரே கட்சியின் நிலைப்பாட்டை அறிவிப்போம் என்றார் கே.ஏ.பாயிஸ். (ற)

## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்.புங்குடுதீவு மகாவித்தியாலய மாணவர்கள் மாகாண மட்டத்தில் உதைபந்தாட்டப் போட்டியில் 17வயது பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவானதையொட்டி இம மாணவர்களுககான கௌரவிப்பு நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் த.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலை பழைய மாணவரும் ஓய்வுபெற்ற தீவக உதவிக் கல்விப் பணிப்பாளருமான த.தவராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக தீவகக் கோட்டக்கல்விப்பணிப்பாளர் சோ.தில்லைநாதன், புங்குடுதீவு சித்திவிநாயக வித்தியால்ய அதிபர் ந.தில்லைநாதன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அ.கருணாகரன் மற்றும் வர்த்தக சங்கப் பொருளாளர் கை.சிறிஸ்காநதன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-126)

## பாராட்டுவிழா

மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் த.சிவபாதவிருதயர், வவுனியா பிரதேச முகாமையாளர் கே.ஆனந்தராஜா, யாழ்ப்பாணப் பிரதேச முகாமையாளர் து.ரகு ஆகியோருக்கான பாராட்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சங்கானை மக்கள் வங்கியில் பொ. அச்சுதம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலர் சி.மோகனதாஸும் சிறப்பு விருந்தினர்களாக பளை பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ,தெலலிப்பழைக் கோட்டக்கல்வி அதிகாரி கைலாயநாதன், வட்டுக்கோட்டை மின்சாரசபை பொறியியலாளர் பி.சண்முகானந்தசிவம், சங்கானை கோட்டக் கல்வி அதிகாரி சண்முகசுந்தரம், சங்கானைக்கிளை இலங்கை வங்கி அதிகாரி திருமதி இராமலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-9)

## இன்று ஒரு தகவல்

# கள்வர்கள்

ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் என் னிடம் ஒரு கேள்வி கேட்டார். "திருடர்கள் எத்தனை வகை என்று உங்களுக்குத் தெரியுமா?" இதுதான் அவர் கேட்ட கேள்வி. எதற்காக அவர் என்னைப் பார்த்து அந்தக் கேள் வியைக் கேட்டாரோ தெரியவில்லை. இருந்தாலும் நான் அவருக்குப் பதில் சொன்னேன். "திருடர்களில் எத்தனையோ வகை உண்டு சார். கார் திருடன், சைக்கிள் திருடன், முகமூடித் திருடன் எனச் சொல்லிக்கொண்டே போக லாம். இருந்தாலும் என் சிற்றறிவுக்கு எட்டிய வகையில் திருடர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம் என்று நினைக்கிறேன். ஒன்று இரவில் திருடும் திருடன். இன்னு மொன்று பகல் திருடன்" என்றேன்.

பெரியவர் சிரித்தார். "என்ன சிரிக்கிறீர்கள்?" என்றேன். "கள்வர்கள் நான்கு வகை"என்று ஆரம்பித்தார்அவர். "கள்வர்களில் சாப்பிட வழி இல்லாமல் திருடுபவர்கள் ஒரு வகை. சாப்பாட்டுக்கு வழி இருந்தும் திருடுபவர்கள் ஒருவகை. இதைத்தவிர இன்னும் இரண்டு வகைத் திருட்டு உண்டு. அவை ஆண்டவனிடமிருந்து நாம் திருடும் திருட்டு ஒன்று. நம்மிடமிருந்து ஆண்டவன் திரு டும் திருட்டு ஒன்று" என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன சார் இது... ஆண்ட வனையே திருடன் என்று சொல்கிறீர்களே?" என்றேன் ஆச் சரியமாக! "ஆமாம்...! ஆண்டவனைக் கள்வன் என்று சொல் வதில்லையா...? காஞ்சிபுரத்திற்குப் பக்கத்தில் திருக்கார் வனம் என்று ஒரு ஊர் இருக்கிறது. அங்கே உள்ள பெருமா ளுக்குக் கள்வர் என்றுதான் பெயர். அது மட்டுமல்ல. திரு மங்கையாழ்வார் தம்முடைய திரு நெடுந்தாண்டகத்தில் "கார் வனத்துள்ளாய்... கள்வா என்று தான் அழைக்கிறார்" என்று நிறைய உதாரண மெல்லாம் சொல்ல ஆரம்பித்தார். அதன்பின் அவரிடம் நான் புரிந்துகொண்ட விபரங்களை உங்களிடம் சொல்கிறேன்.

அவர் சொன்ன முதல் வகைத் திருடர்கள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் திருடுபவர்கள். இவர்களைத் திருத்தி விடலாம். சாப்பாட்டுக்கு வசதி இருந்தும் பணம் சேர்க்க வேண்டும் என்ற ஆசையால் பொய்க்கணக்கு எழுதுபவர்கள் எல்லாம் இரண்டாம் வகை. மூன்றாவது வகைத் திருட்டுதான் மிகப் பெரிய திருட்டு. இறைவ னுக்குச் சொந்தமானதை நம்முடையது என்று நினைக்கும் திருட்டு. இது இறைவனுக்கு சொந்தம்? ஆதமா! பகவானுக்குச் சொந்தமான ஆத்மாவை நம்முடையது என்று நினைப் பதுதான் அந்த மாபெரும் திருட்டு. இதற்குப் பெயர் தான் 'ஆத்மா பஹாரம்' சரி... இதற்குப் பரிகாரம் என்ன? "எல் லாம் இறைவனுடையது. நமக்கு ஒன்றுமில்லை என்று நினைப் பதுதான் இதற்குப் பரிகாரம்"

இவை ஒரு புறமிருக்கட்டும் "நான்காவது திருட்டு ஒன்று சொன்னோமே! ஆண்டவன் நம்மிடமிருந்து திருடு வது! அது எப்படி? ஆண்டவனைக் கள்வன் என்று சொல் கிறார்கள். அது சரி... அவர் எதைத் திருடினார்? இப்போது இன்னொருவருக்குச் சொந்தமான ஒன்றை எடுத்து வைத் துக்கொள்வது தான் கள்ளத்தனம். ஆனால் ஆண்ட வன் என்று எடுத்துக் கொண்டால் இருக்கும் எல்லாமே அவ னுக்குத் தான் சொந்தம்... அப்படி இருக்கும் போது அவரை எப்படிக் கள்வன் என்று சொல்வது? இதற்கு என்ன விளக் கம் சொல்கிறார்கள் என்றால் ஆண்ட வனுக்கு உருவமே கிடையாது. அருவமாக இருப்பவர். அப்படி உள்ள பகவான் நம்மை மாதிரி உருவத்தில் இருக்கிறான். நம்மைப் போலவே கை,கால், மூக்கு எல்லாம் இருக்கிறது. இந்த உருவம் நம்மிடமிருந்து திருடியதுதானே. அவன் தன்னுடைய உண்மையான திருமேனியை நமக்குக் காட்டாமல் அதாவது தரிசனம் அளிக்காமல் இருப்பது கள்ளத்தனம் தானே. அதனால் இதுவும் ஒரு பெரிய திருட்டு... இருப்பதிலேயே பெரிய திருட்டு" என்கிறார் என்னுடன் பேசிக்கொண் டிருந்தவர்.

திருட்டை ஆன்மீக நோக்கில் அவர் பார்க்கிறார். நமது பார்வையில் இதைவிட அபூர்வமான திருட்டுக்கள் இங்கே உண்டு. அபூர்வமான திருடர்களும் உண்டு.

ஒரு திருடன் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே போனான். கொஞ்சநாளில் மறுபடியும் திரும்பி ஜெயிலுக்கு வந்தான். அப்போது சிறை அதிகாரி அவ ருக்குப் புத்தி கூறி னார். "ஏனப்பா... இப்படி அடிக்கடி தவறு செய்துவிட்டு ஜெயிலுக்கு வருகிறாயே...! உனக்கு உற வுகள் ஒன்றும் இல்லையா? உன் அப்பா... அண்ணன் தம் பிகளுடன் சேர்ந்துவாழ வேண்டும் என்று ஆசை இல் லையா?" என்று கேட்டார்.

"அவர்களுடன் சேர்ந்து வாழவேண்டும் என்ற ஆசை எனக்கு நிறைய உண்டு சார்" என்றான் அவன். "அப்படி யென்றால் ஏன் இப்படி ஜெயிலுக்கு வருகிறாய்?" என்றார் இவர். "அவர்கள் எல்லோரும் இங்குதான் இருக்கிறார்கள்" என்றான் அவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# அரசியல் தீர்வை ஏற்படுத்துவதே ஸ்ரீ.சு.கட்சியின் நிலைப்பாடாகும்

## -அமைச்சர் மங்கள

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வினை ஏற்படுத்துவதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் நிலைப்பாடாகும் என அமைச்சர் மங்கள சமர வீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இந்த நிலைப் பாட்டிலேயே இருப்பதாக இலங்கை மன்றக் கல்லூ ரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவிய லாளர் மாநாட்டில் அமைச்சர் மங்கள தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் கிடைத்துள் ளது. இது தொடர்பாக அவர் அரச ஊடகங்களில் கருத்தையும் வெளியிட்டார்.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதி அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக மக்களுக்குக் கூடுதல் நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்கள் ஐக்கிய மக்கள சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் உருவான போது தெரிவித்த கருத்துக்களையே மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றனர். அவற்றின் நோக்கங்கள் ஒருபோதும் வெற் றியளிக்காது எனவும் அமைச்சர் மங்கள மேலும் தெரி வித்துள்ளார். (ற-4)

# அதிகார மோகத்தால் அரசுக்குள் பாரிய பிரச்சினைகள் - ரணில்

(கொழும்பு)


அதிகார மோகம் காரணமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்குள் பாரிய பிரச் சினை ஏற்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி,பிரதமர் மற்றும் ஜே.வி.பியினர் மக்க ளின் குறைகளுக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

கலவானையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதேவேளை, அகலவத்தையில் இடம்பெற்ற கூட்ட மொன்றில் உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியைக் கலைத்த ஜனாதிபதி இன்று ஜே.வி.பியின் வேண்டுகோளின் அடிப்படையிலேயே தான் அவ்வாறு செய்ததாகக் கூறுகின்றார். முன்னாள் அமைச் சர் லக்ஷ்மன கதிர்காமருக்கு பிரதமர் பதவிகிடைக்க இருந்த போது ஜனாதிபதியிடம் போய் சத்த மிட்டு மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியைப் பெற்றுக் கொண்டா எனினும், இன்று அவர் அப் பொறுப்புக் களிலிருந்து விலகிச் செல்கின்றார்.



ஜே.வி.பி முன்னர் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து வந்தது. பின்னர் அரசாங்கத்திலிருந்து விலகி தற்போது பிரதமருக்கு அது ஆதரவளிப்பதாகக் கூறியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் இவர்கள் யாவரும் மக்களின் பொறுப்புக்களிலிருந்து விலகிச்செல்ல முடியாது என ரணில் விக்கிரமசிங்க மேலும் சுட்டிக்காட்டியுள் ளார். (ற-4,9)

# நாட்டை முன்னேற்றுவதற்கு நியாயமான தேர்தல் அவசியம்

## -அமைச்சர் டி.எம். ஜெயரட்ண

(கொழும்பு)

நாட்டை முன்னேற்றுவதற்காக நியாயமான தேர் தல் முறையொன்றை நடைமுறைப்படுத்த வேண் டும் என தபால் தொலைத்தொடர்புகள் மற்றும் மலைய அபிவிருத்தி அமைச்சர் டி.எம். ஜெயரட்ண தெரி வித்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு தேர்தலின் போது அரசியல் பழிவாங்கலுக்கு இலக்கானவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் கண்டியில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தேர்தல் ஒன்றினை நியாயமாக நடாத்தும் முறை மையில் எமக்கு அனுபவம் போதாது. அரசியல்வாதி கள் மத்தியிலும் இதே நிலையே காணப்படுகிறது. வாக்களிப்பவர்களும் இவ்வாறு அனுபவமற்றவர்களா கவே உள்ளனர்.

நாம் விரைவில் தேர்தல் ஒன்றினை எதிர்நோக்க வுள்ளோம். இதனை நியாயமான தேர்தலாக நடாத்த வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகாவும் கோரியுள்ளார்.

அதேபோன்று ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரும் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் நியாய மானதாக அமைய வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இதனைத் தொடர்ந் தும் வலியுறுத்துகின்றனர் எனவும் குறிப்பிட்டார். (ற-4)

# சிங்கள தேசத்தை பாதுகாக்க முன்வரும் மஹிந்தவை ஜனாதிபதியாக்க வேண்டும்

## -ஜே.வி.பி எம்.பி பியசிரி

(கொழும்பு)

எமது நாட்டில் ஒற்றை ஆட்சியை ஏற்படுத்தி ஈழக் கோரிக்கையை இல்லாது ஒழித்து சிங்களத் தேசத்தைப் பாதுகாப்பதாக உறுதியளித்துள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையே நாம் ஜனாதிபதியாக்க வேண்டும். இதற்குத் தொழிலாளர் சமூகம் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப் பினர் பியசிரி விஜேநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பு பொது நூலகத்தின கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கைப் பெற்றோலிய பொதுச் சேவைகள் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டை இரண்டாகப் பிரித்து திறந்த பொருளா தார கொள்கை மூலம் நாட்டுச் சொத்துக்களை வெளிநாட்ட வருக்கு விற்பனை செய்ய முனையும் எதிர்க்கட்சித் தலை வா ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் தேர்தலில் தோற் கடித்து எமது தேசத்தைப் பாதுகாப்போம் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார். (ற)

### வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட

# வட- கிழக்கைச் சேர்ந்த 130 பேருக்கு இழப்பீடு

(கொழும்பு)

வளைகுடா யுத்தத்தின் போது மத்திய கிழக் கில் தொழில் வாய்ப்பு களை இழந்து பாதிக்கப் பட்ட வடக்கு-கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த 130 பேருக்கு நேற்று முன்தினம் இழப்பீடு வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் 3இலட்சத்து 95 ஆயிரம் ரூபா விற்கு மேற்படாததும், 75 ஆயிரம் ரூபாவுக்கு குறையாததுமான இழப்பீடு வழங்கப்பட் டுள்ளது.

1994ஆம் ஆண்டுக்கு முன்னதாக வளைகுடாவில் பணிபுரிந்து யுத்தத் தால் பாதிக்கப்பட்டவர்களில் 388 பேர் இழப்பீட்டுக்காக விண்ணப்பித் திருந்தனர். அவர்களில் 130 பேருக்கு தற்போது இழப்பீடு வழங்கப்பட்டுள் ளது. விண்ணப்பித்த ஏனையவர்க ளின் விண்ணப்பப்படிவங்கள் பரிசீலிக் கப்பட்டு வருகின்றன.

இந்த இழப்பீடுகள் வழங்குவதற்கு ஜெனிவா இழப்பீட்டு ஆணைக் குழு வினால் 4 கோடி 15 இலட் சம் வழங்கப்பட்டிருந்தாக வெளிநாட்டு வேலை வாய்ப் புப் பணியகத்தின் தலைவர் பந்துல கருணா திலக தெரிவித்தார். (ற-8)

### இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு;

# அனுருத்த ரத்வத்தைக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்

(கொழும்பு)

சட்டத்துக்கு புறம்பாக 400கோடி ரூபாவுக்கு மேல் சொத்து சேர்த்து வைத்துள்ளார் எனக் குற்றம் சாட் டப்பட்ட முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கு எதிராக,இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை குற்றப்பத்திரிகை தாக்கல் செய் தது.

1997ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி முதல் 2002ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31ஆம் திகதி வரையான காலப் பகுதியில், அனுருத்த ரத்வத்தை தனது சட்டபூர்வ வருமானத்திற்கு மேலதிகமாக 400கோடி 15 இலட்சம் ரூபா ரொக்கப் பணத்தை சேர்த்துள்ளதாகத் தெரிவித்தே இக் குற்றப்பத் திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

72 இலட்சத்துக்கு மேற்பட்ட தொகையினை செல விட்டு கண்டிப்பகுதியில் வீடொன்றைக் கட்டியுள்ளதா கவும், 75 இலட்சத்துக்கு மேற்பட்ட தொகைக்கு வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்திருப்பதாகவும் ஆணைக்குழு தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் மேலும் குறிப் பிடப்பட்டுள்ளது. (ற-8)

# அன்புள்ள அம்மா

5

கடுமையான வயிற்று நோ, குருதிப்போக்கு என்பன இதற்கான அறிகுறிகளாகும். இது சாதாரணமாக 5 முதல் 8 கிழமைகளுக்குள் நடைபெறும். எனவே கருவுற்ற தாய்மார், கடுமையான வயிற்று நோவிற்கு உள்ளானால் உட



படம்:20

னடியாக வைத்தியரை நாடவேண்டும்.

**கர்ப்பகாலத்தில் வாந்தி வருவது ஏன்?**

கர்ப்பத்தின் போது கரு HCG என்னும் ஹோர் மனை உற்பத்தி செய்கிறது. இதுவே வாந்தியை தூண்டுகிறது. கர்ப்பத்தின் போது அதிகளவு வாந்தி எடுப்போர்களின் கரு மிகவும் உறுதியானது எனக்கூறுவார்கள்.

**வாந்தியை தடுக்க முடியுமா?**

இது ஒரு இயற்கை நிகழ்வாதலால் இதை முற்றாக தடுக்கமுடியாது. சாதாரணமாக இது 3 ஆம் மாதம்வரை நீடிக்கும். வாந்தி கடுமையாக இருப்பின் வைத்தியரை நாடி ஊசி மூலம் நீர்ச்சத்தை பெறுதல் அவசியமாகும். வாந்தி அதிகமாக உள்ள நேரங்களில் உணவை சிறிய அளவுகளாக பலமுறை உண்பது நல்லது. சிலருக்கு உணவு சமைக்கும் மணமே வாந்தியை தூண்டுவதுண்டு.

**வாந்தியைக் குறைக்க சில அறிவுரைகள்**

1. படுக்கையை விட்டு எழு முன்னரே பிஸ்கட் அல்லது தானிய உணவுகள் எதையும் சாப்பிட்டுப் பாருங்கள்.
2. நித்திரையால் எழுந்தவுடன் படுக்கையில் சற்றுநேரம் அமர்ந்திருந்து ஆறுதலாக சுவாசியுங்கள்.
3. பொரித்த காரம் கூடிய உணவுகளைத் தவிருங்கள்
4. பழங்கள், மரக்கறி வகைகளை அதிகம் உட்கொள்ளுங்கள்.
5. வயிறு முற்றாக வெறுமையாவதை தவிருங்கள்.

**மூச்சிளைப்பு**

பெரும்பாலும் 4ஆம், 5ஆம் மாதங்களில மூச்சிளைப்பு ஏற்படும். இது தாயின் சுவாசவேகம் அதிகரிப்பதால் ஏற்படுகிறது. உங்கள் வயிற்றில் உள்ள குழந்தை பெருமளவு இடம்பிடிப்பதால் (நீங்கள் 11 கிலோவை சுமக்கிறீர்கள்) இது ஏற்படுகிறது. உடலில் குருதிச்சோகை இருந்தால் மூச்சிளைப்பு மேலும் அதிகரிக்கிறது. படுக்கும் பொழுது மேலதிகமாக தலையணை ஒன்றை தோளின கீழாக வைப்பதன் மூலம் மூச்சிளைப்பை ஓரளவு குறைக்கலாம்.

## நடு 3 மாதங்கள்

நீங்கள் 3வது மாதத்தை தாண்டிவிட்டால் அது ஒரு முக்கிய மைல் கல். ஏனெனில் இனி 95 சதவீதம் குழந்தைக்கு பிரச்சினை ஏதும் வருவதில்லை. நீங்கள் கர்ப்பமான செய்தியை மற்றவர்களுக்கு பகிரத்தொடங்கலாம். இது உங்களுக்கு மன உற்சாகத்தையும் சிலவிசேட சலுகைகளையும் பெற்றுத்தரும்!

இக்காலத்தில் உங்களுக்கு மறதித்தன்மை அதிகரிப்பதோடு கவனத்தன்மை (Concentration) குறையக்கூடும். உங்கள் உடலில் குருதியோட்டம் அதிகரிப்பதால் உடலில் பிரகாசமும் முடியில் வளர்ச்சியும் காணப்படும். உடலில் ஏற்படும் வரிகள் விரிவடைவதுடன் நடுவயிற்றில் கோடு ஒன்றும் ஏற்படும். இவை பெரும்பாலும் பிரசவத்தின் பின்னர் மறைந்துவிடும்.

4ஆவது மாதமளவில் ஏற்புவலித்தடுப்பு,சிகள் 6 கிழமை இடைவெளியில் போடப்படும். கிட்டத்தட்ட 17ஆம் 18ஆம் கிழமைகளில் ஸ்கான பரிசோதனைக்கு வருமாறு வைத்தியர் உங்களை அழைக்கக்கூடும். சில வைத்தியசாலைகளில் குழநதையில் உள்ள குறைபாடுகள் சிலவற்றைக கண்டுபிடிக்க இரத்தப் பரிசோதனை (SERUM SCREENING) ஒன்றும். Amniocentesis எனப்படும் குழந்தையைச் சுற்றியுள்ள நீரைப்பரிசோதித்தலும் நடைபெறும்.

உங்கள் கிளினிக்கில் பின்வரும் இரத்த சோதனைகளை செய்வார்கள்.

1) குருதிவகை (Blood Grouping) பிரசவகாலத்தில் இரத்தம் ஏற்படும் தேவை ஏற்பட்டாலோ அல்லது உங்களுக்கு $RH^{(-)}$ குருதி வகையெனின் மேலதிக ஊசிகளுக்காகவோ இந்தப்பரிசோதனை பயன்படும்.

2) இரத்தவீதம் (Hb) இப்பரிசோதனை உங்கள் உடலில் உள்ள இரத்த நிலையை காட்டும். மேற்கொண்டு இரும்புச்சத்து குளிகை அல்லது இரத்தமேற்றும் தேவையை தீர்மானிக்கும்.

3) VDRL-உடலில் பாலியல் நோய்களை கண்டறியும் சோதனை.

4) குருதியில் குளுக்கோசின் அளவு: உங்களுக்கு சலரோகத் தன்மை உள்ளதா என அறியும சோதனை. (GTT)

5) றுபெல்லா (Rubella) பரிசோதனை :- உங்களுக்கு றுபெல்லா முன்பு ஏற்பட்டுள்ளதா என அறியும் சோதனை.

பிரசவகாலத்தில் எல்லா உடலுறுப்புகளும் சற்று வீக்கமடையும். உங்கள் மோதிரம், காப்பு என்பன இறுக்கத் தொடங்குவதை அவதானிப்பீர்கள். சிலர் கைகள் விறைப்படைவதை அவதானிப்பீரகள். வயிறு பெருப்பதால் உணவு உட்கொள்வது சற்று அசௌகரிகமாக இருக்கும். இரைப்பையிலிருந்து அமிலக்கசிவு ஏற்படுவதால் நெஞ்செரிவு சிலருக்கு ஏற்படும். அடிக்கடி சிறிய அளவுகளில் ஏதேனும் உண்பதன் மூலம் இதைக்குறைக்கலாம். நெஞ்செரிவு அதிகமானால் மருந்துகள் உட்கொள்ள வேண்டும்.

பிரசவகாலத்தில் நாரிப்பிடிப்பு ஏற்படுவது ஒரு பொதுவான பிரச்சினையாகும். அதிகரித்த உடல் நிறையும், பிரசவ காலத்தில் தசை நார் மற்றும் கசியிழையங்கள் இளகுவதும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.

**நாரிப்பிடிப்பை தவிர்க்கும் வழிகள்**

1. அதிக பாரங்களை தூக்குவதை தவிரத்தல்.
2. முதுகை வளைத்து வேலை செய்வதைத் தவிர்த்தல்.



படம்:21

3. நிமிர்ந்த கதிரைகளை உபயோகித்தல்.
4. படுக்கையை விட்டு எழும்போது நேரே ஏழாமல் பக்கவாட்டாக எழும்புதல்
5. குதி உயர்ந்த செருப்புகளைத் தவிர்த்தல்

**நடு 3 மாதங்கள் (13-28ஆம் கிழமை)**

இக்காலத்தில் உங்கள் வயிற்றின் வீக்கம் வெளியில் தெரிய ஆரம்பிக்கும். வயிற்றில் அடையாளங்கள், வரிகள் தோன்றும். வாந்தி, தலைச்சுற்று என்பன மெல்லக் குறையும், மீண்டும் உடலில் உற்சாகம் தோன்றும். சிலருக்கு இக்காலத்தில் இரும்புச் சத்துக்குறைபாட்டால் இரத்த சோகை ஏற்படுவதுண்டு.

உங்கள் குழந்தை மெதுவாக உதைப்பதை நீங்கள் உணரத் தொடங்குவீர்கள். இது 1வது காப்பமாயின் கிட்டத்தட்ட 20ஆம் (5ஆம் மாதம்) கிழமையளவில் நீங்கள் குழந்தையின் அசைவை உணரத்தொடங்குவீர்கள். இரண்டாவது கர்ப்பமாயின் சற்று முன்னரே அசைவுகளை உணர்வீர்கள்.

இக்கால கட்டத்தில் உங்கள் எலும்பு மூட்டுக்கள் இளகுவதால் சிலருக்கு நாரிப்பிடிப்பு ஏற்படும். உங்களின் உடல்நிலை கிட்டதட்ட கிழமைக்கு 1/2 கிலோ கிராமால் கூடும். ஆடைகள் இறுக்கும், மார்பகங்கள் பெருக்கத் தொடங்கும். சிலருக்கு பால்சுரப்பும் இருக்கும். சிலருக்கு கால வீங்க ஆரம்பிக்கும்.

**கால் வீக்கம் வந்தால் பிரச்சினையா?**

50 வீதமான கர்ப்பிணிகளுக்கு கால் வீக்கம் ஏற்படுகிறது. தனியே கால்வீக்கம் ஏற்படுவதால் பிரச்சினை ஏதும் இல்லை. கர்ப்பத்தின் போது உடற்கலங்களில் அதிகளவு நீர் சேர்வதால் இது பத்தின் போது உடற்கலங்களில் அதிகளவு நீர் சேர்வதால் இது ஏற்படுகிறது. பெரும்பாலும் (படிப்பக்கும்) ஆசிரியர்களே இந்தப் பிரச்சி னைக்கு உட்படுகின்றனர். அதிகநேரம் நிற்பதை தவிர்த்தும் காலை உயர்த்திய நிலையில் வைத்திருப்பதன் மூலமும் வீக்கத்தைக் குறைக்கலாம்.



படம்:19

சிலவேளைகளில் வீக்கமும் உயர் குருதி அமுக்கமும் சேர்ந்திருக்கக்கூடும். எனவே கால் வீக்கம் ஏற்பட்டால் குருதியமுக்கம், மற்றும் சிறுநீர்ப் பரிசோதனை செய்தல் வேண்டும்.

## இறுதி 3 மாதங்கள்

**இறுதி 3 மாதங்கள்**

இந்த மாதங்களில் உங்கள் உடலில் சடுதி

வைத்திய கலாநிதி
சி.நவநீதன்

யான மாற்றங்கள் பல ஏற்படும். நிறை சராசரியாக கிழமைக்கு 500gm (1/2 கிலோ) அதிகரிக்கும்.

உங்கள் கிளினிக்கில் உங்களை 2 கிழமைக்கு ஒருமுறை அல்லது ஒவ்வொரு கிழமையும் பரிசோதிப்பார்கள். தேவை ஏற்படின் குருதிப் பரிசோதனை அல்லது ஸ்கான் பரிசோதனைக்கும் அழைப்பார்கள்.

இக்காலத்தில் குழந்தை பெரும்பாலும் தலை கீழாக திரும்பி, தலை இடுப்புக்குழிக்குள் இறங்கும் 95 வீதமான குழந்தைகள் தலையாலேயே பறககும். 5 வீதமானவை காலால் பிறக்க முயற்சிகக்கும்.

குழந்தையின் அளவு காரணமாக உங்களுக்கு உடல் முட்டாகவும் அசௌகரியமாகவுமிருக்கும். உணவு அதிகளவில் உண்ண இயலாதிருக்கும. உங்கள் திகதியை அண்மிக்கும் போது குழந்தையின் தலை இடுப்புக்குழிக்குள் இறங்கி யதும், உங்கள் அசௌகரியம் சற்று குறைவடையும்.

பெரும்பாலான கர்ப்பிணிகளின் முதலாவது பிரசவத்தின்போது 36ஆம் கிழமைகளளவில் (9 மாதம்) தலை இடுப்புக்குழிக்குள் இறங்கத தொடங்கும் (Engagement) ஏனையோருக்கு கருப்பைச் சுருக்கம் ஏற்படும் போதே தலை இறங்கத் தொடங்கும். (தொடரும்)

# பொங்குதமிழ் நிகழ்வில் அணிதிரளுமாறு விவசாயபீட மாணவர் ஒன்றியம் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சமூகம் செப்ரெம்பர் 30இல், யாழ்.குடாநாட்டில் நடாத்தும் பொங்குதமிழ் நிகழ்விற்கு, தனது முழுமையான ஆதரவை வழங்குவதுடன் இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் விவ சாயபீடமாணவர் ஒன்றியம் அறைகூவல் விடுத்துள்ளது.

இது விடயம் தொடர்பாக ஒன்றியம் விடுதத்துள்ள அறிக்கையில், செப்ரெம்பர் 30இல் எம் மக்களின் உள்ளக்கிடக்கையை சர்வதேச உலகிற்கு உரதத்துக்கூற நாம் அனைவரும் ஒன்று திரளுவோம்!

யாழ்.பல்கலைக்கழக சமூகம் நடாத்தும் பொங்குதமிழ் நிகழ்விற்கு அனைத்து மக்களும் அணிதிரண்டு வந்து, எமது ஒற்றுமையை சர்வதேச உலகிற்கு எடுத்துக் காட்டுவோம்.

காலம் காலமாய் எமது அடிமனதில் புதைந்து, கனன்று கொண்டிருக்கும் எமது உரிமைக்குரலை உலகிற்கு உரத்துக் கூறுவோம்.

வவுனியாவில் மேற்கொண்ட பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக, எமது நீண்ட நாள் கோரிக்கையான தனிநாட்டுக் கோரிக்கையை உறுதிப்படுத்தும் விதமாக அனைவரும் அணிதிரள்வோம்.

இந்நிகழ்விற்கு மக்களாகிய உங்கள் ஆதரவினை வேண்டி நிற்கின்றோம். இந்நிகழ்விற்கு ஆதரவாக உங்கள் பிரதேசங்களில் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகள், பதாதைகள் கட்டி அலங்கரித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் சமாசங்கள், விவசாய சம்மேளனங்கள், மதரீதியான ஸ்தாபனங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள், ஆசிரிய கலாசாலை, கல்வியியல் கல்லூரி மாணவர் ஒன்றியங்கள், சனசமூக நிலைய அமைபபுக்கள் மற்றும் கிராம முன்னேற்ற அமைப்புக்கள் என்பன ஒன்றிணைந்து தத்தம் பகுதிகளில் சிவப்பு, மஞ்சள் கொடிகளை பறக்க விட்டும், தத்தமது ஆதரவுகளை பத்திரிகைகள் ரீதியாக அனைத்து மக்களிற்கும் தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து மக்களிடையே பொங்குதமிழ் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# கலை இலக்கியப் பெருவிழா

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடாத்தும் கலை இலக்கியப் பெருவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 16ஆம் திகதி பி.ப. 2.30மணிக்கு நெல்லியடி தடங்கள் புளியடி முருகமூர்த்தி ஆலய கல்யாண மண்டபத்தில் கலைஞர் செல்லையா அரங்கில் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளன.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ்ூம் சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான கி.சிவனேசன் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் ந.இன்பனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

கரணவாய் பொன்னம்பல வித்தியாலய மாணவர்களின் தமிழ் இன்னிசையுடன் ஆரம்பமாகி பிரதேச கலாசார கொடியேற்றப்பட்டு மங்கள விளக்கேற்றி தமிழ்த்தாய் வாழ்த்தும் இசைக்கப்படும.

வரவேற்புரையை தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் சு.சிவகுமார் நிகழ்த்துவார். விசேட நிகழ்ச்சியாக செல்வி யாழினி லோகநேசனின் இசைக்கச்சேரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவிகளின் "சின்னஞ்சிறு கிளியே" தனி நடனமும், வல்வெட்டி இ.த.க.பாடசாலை மாணவரின் கரகாட்டம், நெல்லியடி மத்திய மாகாவித்தியாலய மாணவரின் தில்லானாவும் திருமதி நி.வாணியின் மாணவர்களின் வயலின் இசையும் வடமராட்சி மத்திய மகளிர் மாணவிகளின் "அம்மன் கீர்த்தனை" தனி நடனமும், கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி மாணவிகளின் கிராமியப் பாடலும் செல்வி பேரின்பநாயகி சிவகுருவின் மாணவிகளின் "சகுந்தலை" நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து கலாசாரப்பேரவை உப தலைவர் க.நடேசு (தெணியான்) அரங்கு பற்றிய அறிமுக உரையை நிகழ்த்துவார். சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் வருகைதரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிகழ்த்துவர்.

விசேட நிகழ்வாக கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது. (ற-101)

## பத்து இலட்சம் செலவில் சிற்றுண்டிச்சாலை

மருதங்கேணி வைத்தியசாலைக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் 10இலட்சம் ரூபா செலவில் சிற்றுண்டிச்சாலை ஒன்றினை நன்கொடையாகக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது. இதற்கான முதற்கட்ட வேலை கடந்த மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது. (து-97)

## அருள்ஜோதி வெளிவந்தது

சர்வதேச இந்துமத குருபீடத்தினால் வெளியிடப்படும் "அருள்ஜோதி" என்னும் ஆன்மீக இதழ் வெளிவந்துள்ளது. (ந-7)

# குரு மாற்றம் உங்களுக்கு எப்படி?

**19-09-2005 முதல் 20-10-2006 வரை**



## கும்பம்

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்**

அன்பார்ந்த கும்ப இராசி வாசகர்களே! மற்றவர்கள் மெய்சிலிர்க்கும் அளவிற்குப் பேசும் திறம் கொண்ட உங்களுக்கு உங்கள் இராசியாதிபதி சனி பகவான் 6ஆம் வீட்டில் 27-6-2005 முதல் 4-8-2007 முடிய சஞ்சாரம் செய்வதாலும் ஆண்டுக்கோள் பிரகஸ்பதி என அழைக்கப்படும் குரு பகவான் வரும் 19-9-2005 முதல் 20-10-2006 முடிய பாக்ய ஸ்தானமான 9ஆம் வீட்டில் சஞ்சரிக்க உள்ளதாலும் உங்களுக்கு எட்டுத் திக்கிலும் வெற்றிதான். தொழில், பொருளாதார நிலையில் வெற்றிமேல் வெற்றி உண்டாகும். கடந்த காலங்களில் உங்கள் மேல் இருந்த வீண் வழக்குகள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும் உங்களின் பொருளாதார நிலை மேம்பட்டு கடந்த காலத்தில் இருந்த கடன்கள் முற்றிலும் பைசலாகும். உங்களுக்குத் தடைப்பட்ட சுபகாரியங்கள் கைகூடி குடும்பத்தில் மகழ்ச்சி உண்டாகும். குறிப்பாக தேவையற்ற பேச்சை சிறிது காலத்திற்குத் தவிர்ப்பது உத்தமம். சர்ப்ப கிரகமான இராகு 2ஆம் இடத்திலும் கேது 8ஆம் இடத்திலும் சஞ்சரிப்பதால் உங்கள் ஆரோக்கிய விஷயத்தில் சற்று முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது உத்தமம். வரும் நாள்கள் சனி, குரு சஞ்சாரத்தால் ஏற்றங்கள் நிறைந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

### ஆரோக்கியம்

உடல்நலம் மிகவும் பிரமாதமாக இருக்கும். இதுவரை இருந்துவந்த நோய்கூட தற்காலத்தில் விலகி மனமகிழ்சசியை ஏற்படுத்தும். மனைவியின் நலம் மிகவும் பிரமாதமாக அமைவதுடன் புத்திர பாக்யத்தையும் பெற்றிடுவீர்கள். பிள்ளைகளும் நல்ல உடல்நலத்துடன் ஆரோக்கியமாகக் காணப்படுவார்கள். மருத்துவச் செலவுகள் இல்லாத காலம் என்றே சொல்லும்படியாக சிறப்பாக அமையும். எதிலுமே மிக வேகமாகவும் சுறுசுறுப்புடனும் செயல்படுவீர்கள்.

### செல்வம், செல்வாக்கு

செல்வம், செல்வாக்கு மிகப் பிரமாதமாக அமையும். மேலும் பெரும் முதலீடுகளால் பலரையும் கவர்ந்து விடுவீர்கள். எல்லா வகையிலும் வெற்றியும் அனுகூலமும் தேடிவரும். கடன்களை உடனடியாக அடைத்துவிடுவீர்கள். பலருக்கும் பல உதவிகள் செய்து நற்பெயரைப் பெறுவீர்கள். அசையாச் சொத்துக்கள் சேரும். வண்டி, வாகனம், நிலம், வீடு, மனை ஆகியவற்றால் சிறப்பான நற்பலன்களைப் பெறுவீர்கள்.

### குடும்பச் சூழ்நிலை

குடும்ப வாழ்வில் பிரச்சினையின்றி மனநிம்மதி ஏற்படும். கணவன் - மனைவியிடையே மிகவும் திருப்தியான நிலை காணப்படும். உற்றார், உறவினர்கள் பகை மறந்து சுபமுயற்சிக்காக ஒத்துழைப்பார்கள். நண்பர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். குடும்பத்தில் மங்களகரமான சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். பொருளாதார நிலை பிரமாதமாக அமைந்து பொருள் சேரும். தாய் வழியில் சிலருக்கு உதவிகள் அமையும். ஆண் புத்திர பாக்கியம் வேண்டுபவர்களுக்கு வேண்டிய படியே அமையும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி தரும்.

### உத்தியோகஸ்தர்களுக்கு

உத்தியோக ரீதியாக சிறப்பாகச் செயல்படுவீர்கள். உடல்நலத்தைப் பெற்று சுறுசுறுப்புடன் இயங்குவீர்கள். செயல்களில் வெற்றிகளால் உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள் விரும்பிய இடமாறுதலையும் பல வருடங்களாகத் தடைப்பட்டு வந்த பதவி, ஊதிய உயர்வுகளையும் இவ்வாண்டில் பெற்று மகிழ்வீர்கள். சிலருக்குக் கௌரவப் பதவி வகித்திடும் யோகமும் கூட அமையும். வெளிநாட்டில் புதிதாக வேலை தேடுபவர்களுக்கு சிறப்பான ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பு அமையும். எடுக்கும் காரியம் எதுவுமே தடைப்படாமல் வெற்றி பெறும்.

### தொழிலதிபர்களுக்கு

செய்கின்ற தொழிலில் ஏற்பட்ட சோதனைகள், சங்கடங்கள், நெருக்கடிகள் யாவும் விலகிவிடும். உயர்வான நிலையில் பிரமாதமான இலாபப் பலனை அடைவீர்கள். பல தொழில்களிலும் பங்குதாரராக ஆவீர்கள். கூட்டுத் தொழிலில் அற்புதமான நிலை உண்டாகும். எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் வியாபாரத்திலும் வெற்றி மேல் வெற்றியை அடைவீகள். நல்ல இலாபப் பலனை அடைவீர்கள்.

### மங்கையருக்கு

மன அமைதி உண்டாகும். கணவன் - மனைவியிடையே உறவில் திருப்தி இருக்கும். உறவினர்களின் உதவியால் முயற்சிகளில் நற்பலன்கள் விளையும். சிலருக்கு தாய்வழியில் பலவித நற்பலன்கள் அமையும். எடுக்கும் காரியம் மிகச் சிறப்பாக நடைபெறும்.

### கல்விநிலை

நீங்கள் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி சிறப்பான மதிப்பெண்களைப் பெறுவீகள். நடைபெறும் பொதுத் தேர்வுகளில் சாதனை புரியும் மாணவர்களில் நீங்களும் ஒருவராகக் காணப்படுவீர்கள். நண்பர்களுடன் இனிமையான உல்லாசப் பயணம் அமையும்.

### கலைஞர்களுக்கு

புதிய புதிய வாய்ப்புகளில் மின்னிப் பிரகாசிக்கும் ஆண்டாக அமையும். சிறப்பான தனவரவுகள் அமையும் எடுக்கும் முயற்சிகளில் அனைவராலும் பாராட்டப்படுவீகள். புதிய சிந்தனைகள் தோன்றும். பாடல், இசை, டைரக்ஷன் துறையில் உள்ளவர்களுக்குப் பாராட்டும் பரிசுகளும் கிட்டும். ரசிகர்களின் வரவேற்பு கூடும். சிலருக்கு அரசால் பாராட்டும் நிலை மனமகிழச்சி தரும்.

### விவசாயிகளுக்கு

அரசு மூலம் நீங்கள் அனுகூலப் பலனை அடைய முடியும். மகசூல் பிரமாதமாக அமையும் விளைச்சல் மூலம் தானியங்கள் பெருகும். விளைபொருள்களை மிகவும் நல்ல விலைக்கு விற்பதன் மூலம் இலாபம் இவ்வாண்டு சிறப்பாக அமையும்.

### இளைஞர்களுக்கு

நீங்கள் உற்சாகமாக இருக்கும் காலமாக அமையும். நண்பர்களிடம் சிறந்த பண்பும் நேசமும் வளரும். படித்த கல்விக்கேற்ற வேலையை இவ்வாண்டு பெற்று மனமகிழ்ச்சி அடைவீகள். தாய், தந்தையின் நலம் வெகு சிறப்பாக இருக்கும்.

### குரு பகவான் துலாத்தில் சித்திரை நட்சத்திரத்தில் 19-09-2005 முதல் 20-10-2005 வரை

உங்களுக்கு இக்காலம் மிக மிக அற்புதமான காலமாக அமையும் உங்கள் பெயர், புகழ், செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து, பெருமை யாவும் உயரும். உடல் நலனில் பிரமாதமான பலமும் வலிமையும் உண்டாகும். எதிரிகளை ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிடுவீர்கள். மனைவி மற்றும் குழந்தைகளும் மிகவும் சுபீட்சமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படுவார்கள். குடும்பத்தில் மறக்கமுடியாத இனிய சம்பவங்கள், ஆண் புத்திர பாக்கியம் அமையும். கணவன் - மனைவியிடையே உறவு பலப்படும். தொழில், வியாபாரம், கூட்டுத்தொழில் போன்றவற்றில் மிகவும் அற்புதமான ஏற்றமும் இலாபமும் அமையும். வெளியூர், வெளிநாட்டு தொடர்புகளால் நிறைய சம்பாதிப்பீர்கள். வீடு, மனை, வண்டி, வாகன அமைப்பும் உண்டாகும். புதிய நிரந்தர வேலை தேடுபவர்களுக்கு அமையும். பதவி, ஊதிய உயர்வு தேடி வரும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 21-10-2005 முதல் 26-12-2005 வரை

இக்காலத்திலும் தொடர்ந்து சிறப்பான நற்பலன்களையே அடைவீர்கள். கடந்த காலத்தில் தடங்கலான விஷயங்கள் கூட சிறப்பாக நிறைவேறும். உடல்நலம் மிகவும் பிரமாதமாக அமையும். மருத்துவச் செலவுகள் மறையும். பொன், பொருள் சேரும். சிலர் வீடுகட்டி குடிபுகுவீர்கள். வண்டி. வாகனச் சேர்க்கையும் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் பெரிய மனிதர்களின் ஆதரவையும் பெறுவீகள். எடுக்கும் முயற்சிகள் யாவும் வெற்றிமேல் வெற்றி தரும். வம்பு, வழக்குகள் பைசலாகும். தொழில், வியாபார நிலையில் மிகவும் பிரமாதமான அபிவிருத்தி, இலாபம் உணடாகும். கூட்டாளிகளுடன் உறவு மிகவும் சிறப்பாக அமையும். திருமண சுபமுயற்சிகள் மிகவும் அற்புதமாக நிறைவேறி மன மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 27-12-2005 முதல் 02-03-2006 வரை

மனதில் உற்சாகத்துடன் அன்றாடச் செயல்களில் சுறுசுறுப்புடன் ஈடுபடுவீர்கள். வெற்றிகள் உங்களைத் தேடிவரும். உற்றார், உறவினர்களின் ஆதரவால் திருமண சுபமுயற்சி மிகவும் பிரமாதமாக நிறைவேறிவிடும். குழந்தை பாக்யம் இல்லாதவர்களுக்கு ஆண்குழந்தை பாக்யம் அமையப்பெறும். உத்தியோக நிலையில் பெயர், புகழ், பொறுப்புகளால் பூரிப்பு ஏற்படும். பதவி உயர்வுகள், கௌரவப் பதவிகள் கிட்டும். நிலுவைத் தொகைகள் கிடைக்கப்பெற்று வண்டி, வாகனச் சேர்க்கை பெறுவீர்கள். குடும்ப வாழ்வில் கணவன் - மனைவியிடையே உறவு பலப்படும். அரசியலில் பதவிகளால் பெருமை, புகழ் உண்டாகும். மாணவர்கள் அற்புதமாக மேற்கல்வியில் ஈடுபடுவீர்கள். பெற்றோர்களுக்குப் பூரிப்பும் ஏற்படும்.

### குரு பகவான் வக்ர நிலையில் 03-03-2006 முதல் 04-06-2006 வரை

இக்காலத்திலும் மேலும் நற்பலன்களே உண்டாகும். நினைத்த காரியம் யாவுமே நிறைவேறும். உடல்பலமும் வலிமையும் பெற்று காட்சியளிப்பீகள். மனைவி, புத்திரர்கள் சுகமாகவும் சுபீட்சமாகவும் இருப்பர்கள். மருத்துவச் செலவில்லாத காலமாக அமையும். பூர்வகச் சொத்து வகை வம்பு, வழக்குகள் உங்களுக்குச் சாதகமாக அமையும். புதுவீடு கட்டி சிலர் குடிபுகுவீர்கள். தொழில், வியாபார நிலையில் போட்டிகளும் பொறாமைகளும் இல்லாமல் முன்னேற்றம் மளமளவென நடைபெறும் உத்தியோக நிலையில் அதிகாரிகளால் பாராட்டப்படும் நிலையும் சக ஊழியர்களின் அன்பும் அரவணைப்பும் மனதிற்கு உற்சாகத்தை ஏற்படுத்தும்.

### குரு பகவான் துலாத்தில் சுவாதி நட்சத்திரத்தில் 05-06-2006 முதல் 18-08-2006 வரை

பொருளாதார நிலை மிகவும் அற்புதமான பலனை ஏற்படுத்தும். புதிய வீடு, வண்டி, வாகன அமைப்பும் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும். பூர்வீகச் சொத்து கைக்கு வந்து சேரும். வம்பு, வழக்குகள் வெற்றி மேல் வெற்றி தரும். தொழில் வியாபாரத்தில் பலவிதமான இலாபமும் ஏற்றமும் புதிய தொழில் தொடங்கிடும் யோகமும் அமையும். வேலையாள்கள் சிறப்பாகக் பணி புரிவார்கள். எடுக்கும் எந்தவொரு செயலிலும் வெற்றிகள் குவியும். குடும்பத்தில் கணவன் மனைவியிடையே அன்னியோன்யமான நிலை, புத்திர பாக்கியம் போன்றவை பூரிப்பை ஏற்படுத்தும். கூட்டுத் தொழிலும் அற்புதமாக முன்னேற்றமடையும். அரசியலில் வெற்றியும் ஆதரவும் புகழின் உச்சிக்கே உங்களைக் கொண்டு செல்லும்.

### குரு பகவான் துலாத்தில் விசாக நட்சத்திரத்தில் 19-08-2006 முதல் 20-10-2006 வரை

நினைத்தது நிறைவேறும் காலமாகும். உயர் கல்விக்காக சிலர் எழுதும் நுழைவுத் தேர்வுகளில் முதலாவதாக வந்து சாதனை படைப்பீர்கள். மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளுக்குத் தேர்வு பெறுவீர்கள். சிலருக்கு அரசாங்க மூலம் பயிற்சியுடன் கூடிய நல்ல வேலை அமையும். பெற்றவர்கள் பெருமைப்படுவார்கள். பொருளாதார நிலையில் அற்புதமான பண வரவுகளும் சேமிப்பும் உண்டாகும். வெளியூர், வெளிநாட்டுப் பயணம் அனுகூலம் ஏற்படுத்தும். தொழில், வியாபார நிலையில் மற்றவர் வியக்கும்படியாக ஏற்றமும் உயர்வும் உண்டாகும். புதிய பணி, நிரந்தரப் பணி கிடைக்கும். பெண்கள் மனமகிழ்ச்சி அடையும்படியாக கணவன் - மனைவியடையே உறவு பலப்படும்.

### நட்சத்திரப் பலன்கள்

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்:**

உங்களுக்கு தற்போது மறுமலர்ச்சி ஏற்படும் காலமாகும். அற்புதமான உடல் நலம், எதிரிகளை வெற்றி கொள்ளும் அமைப்பு, பலமும் வலிமையும் பெற்று காட்சியளிப்பீர்கள். பிரமாதமான பணவரவுகளும் சேமிப்பும், வீடு, வண்டி, வாகன அமைப்பையும் பெறுவீர்கள். செல்வம், செல்வாக்கு உயரும் மாணவர்கள் சாதனை புரிவீர்கள்.

**சதயம்:**

எடுக்கும் காரியம் எதையுமே தைரியத்துடன் வெற்றி கொள்வீகள். அசையாச் சொத்துக்களும் சேரும். வம்பு, வழக்குகள் வெற்றி தரும். கொடுக்கல், வாங்கலில் சிறப்பான அனுகூலம் உண்டாகும். தொழில், வியாபார நிலையில் பிரமாதமான அபிவிருத்தியையும் முதலீடுகளையும் செய்து இலாபம் காண்பீர்கள். திருமண காரியம் தடை விலகி தடபுடலாக நிறைவேறும். வெளியூர், வெளிநாட்டுப் பயணம் இனிமையாக அமையும்.

**ஜோதிட மேதை**
**பாலமுருகன்**

**பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்:**

கணவன் -மனைவியிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் பெருமளவில் அன்பும் பாசமும் நிலவிவரும். ஆடை, ஆபரணம் சேரும். உத்தியோக நிலையில் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் பிரமாதமாக அமையும். புதிய வேலை வாய்ப்புகள் கிட்டும். கூட்டாளிகள் மிகுந்த நம்பிக்கை, நாணயத்துடன் நடந்து கொள்வார்கள். விவசாயம் நல்ல விளைச்சலை ஏற்படுத்தும்.

**பரிகாரம்:**

குரு, சனி பிரமாதமாக சாதகமாக அமையப்பெற்றாலும் சாயாகிரக சஞ்சாரம் சரியாக அமையவில்லை. உங்கள் இராசிக்கு 2இல் இராகு, 8இல் கேது சஞ்சரிப்பதால் செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக்கிழமை இராகு கால பூஜையில் கலந்துகொள்வது, அம்மனுக்கு எலுமிச்சம்பழ மாலை, எலுமிச்சம் பழ விளக்கு, நெய் விளக்கு ஏற்றுவது, குங்கும அர்ச்சனை, சிவப்பு மலர்களால் அர்ச்சனை செய்வது, சர்வேஸ்வரரை வழிபடுவது மிகமிக உத்தம பலனை ஏற்படுத் தும்.

தினமும் விநாயகரை தரிசிப்பதால் விக்கினங்களை விலக்கி உங்களைக் காப்பாற்றுவார். தொழு நோயாளிகளுக்கு அன்னதானம், உதவிகள் செய்வது உத்தம பலனை ஏற்படுத்தும்.

(தொடரும...)

# ஐ.சி.சி விருதுப் பட்டியலில் இலங்கை வீரர் இருவர்

சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் வழங்கப்படும் சிறந்த வீரருக்கான விருதுப்பட்டியலல் இந்தியாவின் ராகுல் டிராவிட் இடம் பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் கடந்த ஆண்டு சிறந்த வீரர், சிறந்த டெஸ்ட் அணி, சிறந்த ஒருநாள் அணி, சிறந்த டெஸட் வீரர், சிறந்த ஒருநாள் வீரர், நம்பிக்கை தரும் வீரர் ஆகிய விருதுகள் வழக்கப்பட்டன. ஒஸ்கார் விருதுக்குச் சமமான இந்த விருது கிரிக்கெட்டில் மதிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு சிறந்த வீரருக்கான விருதை இந்தியாவின் ராகுல் டிராவிட் தட்டிச் சென்றார். இந்த ஆண்டுக்கான விருதுகள அடுத்த மாதம் 11ஆம் திகதி சிட்னியில் வழங்கப்படவுள்ளது.

இதற்காக 56 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு அணியின் தற்போதைய அணித் தலைவர்கள், போட்டிக்கான நடுவர்கள், பத்திரிகையாளர்கள், முன்னாள் சிறந்த வீரர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் பரிந்துரைக்கும் வீரர்களை ஐந்து பேர் கொண்ட குழு ஆய்வு செய்யும். இந்த 5பேர் கொண்ட குழுவின் தலைவராக இந்தியாவின் முன்னாள் அணித்தலைவர் சுனில் கவாஸ்கர் உள்ளார்.

இந்த விருதுகளை பெறுவதற்காக தகுதியுள்ள வீரர்களது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

சிறந்த வீரருக்கான விருதை பெறுவதறகு டிராவிட் (இந்தியா), பிளின்ரொப் (இங்கிலாந்து), கிலகிறிஸ்ட் (அவுஸ்திரேலியா), இன்சமாம் (பாகிஸ்தான்), கலிஸ் (தென் ஆபிரிக்கா), மெக்ராத் (அவுஸ்திரேலியா) ஆகியோரது பெயர்களும், சிறந்த டெஸ்ட வீரர் விருதைப் பெறுவதற்கு சந்திரபோல் (மேற கிந்தியதீவுகள்), கில்கிறிஸ்ட் (அவுஸ திரேலியா), இன்சமாம் (பாகிஸ்தான்), கலிஸ (தென் ஆபிரிக்கா), யுனிஸ்கான் (பாகிஸதான்), லாரா (மேற்கிந்தியத் தீவுகள்), மார்ட்டின் (அவுஸ்திரேலியா), கும்ளே (இந்தியா), மெக்ராத் (அவுஸ்திரேலியா), பொண்டிங் (அவுஸ்திரேலியா), கனேரியா (பாகிஸ்தான்), சங்ககாரா (இலங்கை), சேவாக் (இந்தியா), ஹர்பசிங் (இந்தியா), ஷேன்வோன் (அவுஸ்திரேலியா) ஆகியோ களது பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

மேலும் சிறந்த ஒருநாள் வீரர் விருதினைப பெறுவதற்காக டிராவிட் (இந்தியா), பிளிண்ரொப் (இங்கிலாந்து), கிப்ஸ் (தென் ஆபிரிக்கா), கில்கிறிஸ்ட (அவுஸ்திரேலியா), இன்சமாம் (பாகிஸ்தான்), பிரெட் லீ (அவுஸ்திரேலியா), மெக்ராத் (அவுஸ் திரேலியா), கெம்ப் (தென் ஆபிரிக்கா), மலிக் (பாகிஸ்தான்), பீற்றர்சன் (இங்கிலாந்து) விக்ரோறி (நியூசிலாந்து), பொண்டிங் (அவுஸ்திரேலியா), சங்ககாரா (இலங்கை), சிமித் (தென் ஆபிரிக்கா), சைமன்ஸ் (அவுஸ் திரேலியா), டிரஸ் கோதிப் (இங்கிலாந்து), வாஸ் (இலங்கை), யுகானா (பாகிஸ்தான்) ஆகியோரது பெயர்களும், சிறந்த வளரும் வரருக்கான விருதைப் பெறுவதற்கு அப்தாப் அகமது (பங்களாதேஷ்), பெல் (இங்கிலாந்து), கம்பீர் (இந்தியா), தினேஷ் கார்ததிக் (இந்தியா), பீற்றர்சன் (இங்கிலாந்து), ரானா (பங்களாதேஷ்), டிவில்லர்ஸ் (தென் ஆபிரிக்கா) ஆகியோரது பெயர்களும் பரிந்துரைக்கப பட்டுள்ளன. (அ-19)

# சுப்பர் சீரிஸ் தொடரில் சச்சின் விளையாட உடற்தகுதி அவசியம்



சுப்பர் சீரிஸ் தொடரில் விளையாட வேண்டுமெனில் இன்னும் ஆறு நாட்களில உடல் தகுதியை நிருபிக்க வேண்டுமென சச்சினுக்கு ஐ.சி.சி கெடு விதித்துள்ளது.

உலக லெவன், அவுஸ்திரேலியா அணிகள மோதும் சுப்பர் சரிஸ் கிரிக்கெட் தொடர் அடுத்த மாதம் நடக்கவுள்ளது. இதில் மூன்று ஒருநாள் போட்டிகளும், டெஸ்ட் போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளன. இதற்கான உலக லெவன் அணியில் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் இடம்பெற்றுள்ளார். ஆனால் இவர் விளையாடுவது சந்தேகமாகவே உள்ளது.

இடது முழங்கை காயம் காரணமாக சத்திர சிகிச்சை செய்துகொண்ட சச்சின் இன்னும் முழுமையாக குணமடையவில்லை. இதனால் சிம்பாவே சுற்றுப் பயணத்திலும் இடம்பெறவில்லை. இந்நிலையில் சுப்பர் சீரிஸ் தொடரில் இவர் விளையாட வேண்டுமெனில், உடல் தகுதியை நிருபிக்க வேண்டுமென கூறியுள்ளது சர்வதேச கிரிக்கெட் சபை.

இச் சபையின் முகாமையாளர் டேவ் ரிச்சர்ட்சன் கூறுகையில்,

'சச்சின் தன்னம்பிக்கை இழந்து காணப்படுகிறார் உலக லெவன் அணி பயிற்சியாளரான ஜோன் ரைட்டிடம் தனது காயம் குறித்து விவாதித்துள்ளார். இவர் மேல் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. ஆனாலும தற்போதைய நிலையில் சச்சின் முழு உடல் தகுதியுடன் இருப்பது அவசியமானது. இவர் தனது உடல் தகுதியை நிருபிக்க எதிர்வரும் 21 ஆம் திகதி வரையும் கெடு விதித்துள்ளோம். ஒருவேளை இவர் இடம்பெறாத பட்சத்தில் மாற்று வீரர் தேர்வு செய்யப்படுவார்' என்றார். (அ-19)

# விளையாட்டு செய்திகள்

# ஆஷஸ் தொடரில் அசத்தியதால் ஷேன்வோன் கப்டனாகும் வாய்ப்பு



ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலிய அணி மரண அடி வாங்கியது. இதற்கு பரிகாரம் தேடும் வகையில புதிய கப்டனாக ஷேன் வோர்ன் நியமிக்கப்பட வேண்டுமென அவுஸ்திரேலிய ஜாம்பவான் டெனிஸ் லில்லி வலியுறுத்தியுள்ளார்.

சமீபத்தில் நடந்த ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவை 2-1 என்ற கணக்கில் வீழ்த்தியது. 8 முறை தொடர்ந்து கோப்பை வென்ற அவுஸ்திரேலியா முதல்முறையாக பரிதாபமாக தோற்றது. இதையடுத்து அவுஸ்திரேலியா அணியில் அதிரடி மாற்றங்கள் செய்யப்படும என எதிர்பார்க்கப்படுகிறது. சரியான வியூகம் வகுக்கத் தவறிய கப்டன் பொண்டிங் பதவி பறிபோகலாம்.

ஹைடன், மார்ட்டின், கடிச் போன்றவர்கள் நீக்கப்படலாம் எனத் தெரிகிறது.

இந்தச் சூழலில் கப்டன் பதவிக்கு வோன் தான் பொருத்தமான வர் என்றரர் டெனிஸ் லில்லி. இது தொடர்பாக லில்லி பின்வருமாறு கூறினார்,

'ஐந்தாவது டெஸ்டின் பெரும்பாலான நேரங்களில் வோன் தான் செயல்படும் கப்டனாக காட்சி அளித்தார். கிரிக்கெட் ஞானம் அதிகம் உள்ளவர் பொண்டிங். துடுப் பாட்டத்தில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும்.

அவுஸ்திரேலியா அணி மீண்டும் ஆஷஸ் கோப்பையை கைப்பற்ற வோன் உடனடியாக கப்டனாக நியமிக்கப்பட வேண்டும். 120 சதவீதம் உழைக்கக்கூடிய இவர் களத்தடுப்பு வியூகம் அமைப்பதிலும் கெட்டிக்காரர்'.

இம்முறை ஆஷஸ் தொடரில் வோன் ஹீரோவாக ஜொலித்தார். 5 போட்டிகளில் 40 விக்கெட் வீழ்த்திய இவர் 249 ஓட்டங்கள் எடுத்தும் அசத்தினார். (அ-19)



பீஜிங்கில் நடைபெற்ற சீன ஓபன் ரெனிஸ் போட்டியில் தைவான் வீரர் வங்யூடிசூசை 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் தோற்கடித்த ஸ்பெயின் வீரர் ரபேல் நடாவைப் படத்தில் காணலாம்.

# இளைஞர்களுக்கான சதுரங்கச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இவ்வருடம் நடாத்தப்படவிருக்கும் (THE JUNIOR NATIONAL CHESS CHAMPIONSHIP-2005) ஆசிய இளைஞர்களுக்கான சதுரங்க சம்பியன போட்டியில் கலந்து கொள்வதற்காக போட்டியாளர்களை தெரிவு செய்வதற்கு தேசிய மட்டத்தில் நாடாத்தப்படும தெரிவுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக 9 மாகாண மட்டங்களில் தெரிவுப்போட்டிகள் நடை பெறவுள்ளன.

வடமாகாணத்தில் இப்போட்டிகள் எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

இதில் 2005-01-01 திகதிப்படி 20 வயதுக்குட்பட்ட ஆண், பெண் போட்டியாளர்கள் பங்குபற்றலாம். வயதுப் பிரிவுகளாக 2005-01-01 திகதிப்படி 9,11,13,15,20 வயதுக்குட்பட்ட ஆண், பெண் பிரிவுகளில் போட்டியாளர்கள் தேர்ந்து எடுக்கப்படவுள்ளனர்.

விண்ணப்பக் கட்டணம் ரூபா 150 ஆகும். போட்டியாளர்கள் 17ஆம் திகதி காலை 9.00 மணிக்கு முன் நேரடியாக யாழ.இந்து ஆரம்பப் பாடசாலைக்குச் சமுகமளித்து விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்திப் பங்குபற்றலாம்.

ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் 1ஆம்,2ஆம், 3ஆம் இடத்தைப் பெறும் வீரர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் சான்றிதழ்களும் இலங்கைச் சதுரங்கச் சம்மேளனத்தினால வழங்கப்படவுள்ளன. (ற)

# வலுவான நிலையில் இந்தியா

சிமபாவேயில் நடைபெற்றுவரும் இந்தியா - சிம்பாவேக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா வலுவான நில்லயில் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி முதல் நாள் ஆட்ட முடிவில் 7 விக்கெற்றுககளை இழந்து 265 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்நிலையில், இரண்டாம் நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வேளை ஆட்ட இறுதியில் சிமபாவே அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 279 ஓட்டங்களை எடுத்திருந்தது.

சிம்பாவே அணிசார்பாக அணித் தலைவர் தைபு 71ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்து வீச்சில் இர்பான பதான் 58 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெற்றுக்களை வீழ்த்தினார். சகீர்கான் 3, கும்ளே 2 விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக சேவாக்கும், கம்பீரும் களம் இறங்கி நன்றாக விளையாடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்துச் சென்றவேளை சேவாக் 6 பவுண்ரிகள், ஒரு சிக்சர் அடங்கலாக 44 ஓட்டங்களை எடுதத நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து 46 ஓட்டங்களுடன் கம்பீரும் ஆட்டமிழந்தார்.

பின்னர் டிராவிட்டும், லக்ஸ்மனும் இணைந்து சிறப்பாக விளையாடி மூன்றாவது விககெற்றுக்காக 130 ஓட்டங்களை எடுத்தனர். இந்நிலையில் டிராவிட 77 ஓட்டங்களை எடுத்த நிலையீல் ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய அணித்தலைவா கங்குலி ஆமை வேகத்தில் 23 ஓட்டங்களை எடுத்த நிலையிலும், லக்ஸ்மன் 125 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இந்திய அணி 3 விக்கெற் இழப்பிற்கு 325 ஓட்டங்களை எடுத்த நிலையில் உள்ளது. இந்தியா தொடர்ந்து விளையாடி மிகப் பெரிய அளவில் ஓட்ட எண்ணிக்கையை குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-19)

# ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியாவை வென்று தரவரிசையில் முன்னேறும் இங்கிலாந்து அணி

சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் போட்டிக்கான புதிய தரவரிசைப் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது. இதில் இங்கிலாந்து அணி சிறப்பான முன்னேற்றம் கண்டுள்ளது. ஆஷஸ் தொடரில் 2-1 என்ற முன்னிலையில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியதன் மூலம் 114 புள்ளிகளில் இருந்து 119 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. 2003ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படும் இப் பட்டியலில் அவுஸ்திரேலியாவைத் தவிர அதிகபட்ச புள்ளிகளைப் பெற்ற மற்றொரு அணியாக இங்கிலாந்து உள்ளது.

இதன் மூலம் இரண்டாவது இடத்திலுள்ள இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவின் நம்பர் -1 இடத்தைப் பிடிப்பதற்கான வாய்ப்புகள அதிகரித்துள்ளன.

இங்கிலாந்து அணி அடுத்ததாக பாகிஸ்தான் மற்றும் இந்தியாவற்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இவ்விரு தொடர்களிலும் அபார வெற்றி பெறும் பட்சத்தில் அவுஸ்திரேலியாவைப் பின்னுக்குத் தள்ளுவதற்குச் சந்தர்ப்பம் உண்டு.

அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரையில் ஆஷஸ் தோல்வி தரவரிசைப்பட்டியலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. 133 புள்ளிகளிலிருந்து 127 புள்ளியாக கீழிறங்கியுள்ளது. ஆனாலும் தனது 'நம்பர் -1' இடத்தைத் தக்கவைப்பதற்கும் அவுஸ்திரேலியாவிற்கு வாய்ப்புள்ளது. அடுத்து மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் தென் ஆபிரிக்கா அணிகளுக்கெதிராக விளையாட உள்ள அவுஸ்திரேலியா அணி இரு தொடர்களிலும் வெற்றிபெறும் பட்சத்தில் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளலாம்.

இத் தரவரிசைப் பட்டியலில் 111 புள்ளிகளைப் பெற்று இந்தியா மூன்றாவது இடத்திலும், 100 புள்ளிகளைப் பெற்று தென் ஆபிரிக்கா நான்காவது இடத்திலும், அதே புள்ளியைப பெறறு நிய,சிலாந்து ஐந்தாவது இடத்திலும், 98 புள்ளிகளைப் பெற்று இலங்கை அணி ஆறாவது இடத்திலும், 95 புளளிகளைப் பெற்று பாகிஸ்தான் ஏழாவது இடத்திலும், 74 புள்ளிகளைப் பெற்று மேற்கிந்தியத் தீவுகள் எட்டாவது இடத்திலும், 28 புள்ளிகளைப் பெற்று சிம்பாவே ஒன்பதாவது இடத்திலும், 6 புள்ளிகளைப் பெற்று பங்களாதேஷ பத்தாவது இடத்திலும உள்ளன. (அ-19)

# மனிதன் இயற்கையுடன் ஒன்றிணையும் போது

## இன்று உலக ஓசோன் தினம்

## இயற்கை மனிதனைப் பாதுகாக்கும்

சு.சிவநேசராசன்
ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

செப்ரெம்பர் 16ஆம் திகதியாகிய இன்றைய தினம் உலக ஓசோன் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு இருக்கின்றது. பூமியில் வாழும் உயிரினங்களை சூரிய ஒளிக்கதிருடன் வருகின்ற UV கதிர் போன்ற நச்சுக்கதிர்களில் இருந்து பாதுகாக்கின்ற ஓசோன் படலத்தின் முக்கியத்துவத்தை சர்வதேச சமூகம் சிந்திக்கின்ற நாள் இது.

*இன்றைய தினத்தில் ஓசோன் படலம் என்றால் என்ன?
*பூமியில் வாழும் உயிரினங்களுக்கு அதன் முக்கியத்துவம் என்ன?
*ஓசோன் படலம் அழிவதற்குக் காரணம் என்ன?
*ஓசோன் படலம் அழிவதனால் மனிதனுக்கு ஏற்படும் தீமைகள் யாவை?
*ஓசோன் படலத்தை எவ்வாறு பாதுகாக்கலாம்?

போன்ற விடயங்களை எல்லோரும் அறிந்திருப்பது அவசியம் ஆகும்.

### பூமியும் உயிரினங்களும்

பிரபஞ்சத்தில் உள்ள கோள்களில் பூமியில மட்டுமே உயிரினங்கள் வாழ்கின்றன என்று இதுவரை அறியப்பட்டுள்ளது. பூமியில் இயற்கையாகவே உள்ள வளிமண்டல அமைப்பு, திரவ நிலையில் உள்ள நீர், சிறப்பான வெப்பநிலை என்பன பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கு சிறப்பான காரணிகளாக உள்ளன.

அதாவது ஏனைய கோள்களுடன் ஒப்பிடும்போது உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த காரணிகள் பூமியில் நிறைந்துள்ளன என்பது உயிரியல் விஞ்ஞானத்துறையால் பூரணமாக ஏற்றுக கொள்ளப்பட்டு இருக்கின்றது.

ஆனால் தற்காலத்தில்
*பூமியின் வெப்பநிலை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.
*மனிதர்களுக்கு புதுப்புது நோய்கள் ஏறபடுகின்றன!
*வளிமண்டலத்தில் உயிரினங்களின் சுவாசத்துக்கு அவசியமான ஒட்சிசன் வாயுவின் அளவு குறைந்து வருகின்றது.
*காபனீரொட்சைட் வாயுவின் அளவு அதிகரிக்கின்றது.

இதனால் பூமியானது உயிரினங்கள் எதுவும் வாழமுடியாத பாலைவனமாக மிக வேகமாக மாற்றப்பட்டு வருகின்றது என்ற சர்வதேச சூழலியலாளர்கள் இயற்கையியலாளர்கள், உயிரியலாளர்கள் மனித சமூகத்ததுக்கு எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

இவற்றுக்குக் காரணம் என்ன?

### இயற்கையும் மனிதனும்

ஆதிகால மக்கள் இயற்கையின் வடிவில் இறைவனைக் கண்டனர். இயற்கையை தெய்வமாகப் போற்றி வழிபட்டனர். இயற்கையை அனுசரித்து வாழ்க்கை நடத்தினர்.

நாளடைவில் அறிவியல் வளர்ச்சி காரணமாக மனித நாகரிகம் வளர்ந்தது. மனிதனின் தேவைகள் அதிகரித்தன. இயற்கையுடன் மனிதன போராட ஆரம்பித்தான். இப்போராட்டத்தின் இறுதியில் வெற்றி பெறுவது யார்?

இயற்கையா? அல்லது மனிதனா? மனிதன் தான் வென்றதாகப் பாசாங்கு செய்தாலும் ஈற்றில் வெற்றி பெறுவது இயற்கையே.

"சோதனையாலே தென்றலும் ஒருநாள் புயலாய் சீறிடுமே" என்பதுபோல இயற்கையின சீற்றத்தை யாரால் தடுக்க முடியும்?

உதாரணமாக, இற்றைக்கு ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு முன்பு இலங்கையில் "காடுகளை அழித்துக் கழனிகள் ஆக்குவோம்" என்ற புதிய சித்தாந்தத்துடன் பெரும்பாலான காட்டு மரங்கள் தறிக்கப்பட்டு சேனைப்பயிர்ச் செயகை மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையின் வடபகுதி உட்பட பெரும்பாலான பிரதேசத்தில் உள்ள காடுகள் முற்றாக அழிக்கப்பட்டன. இதற்குப் "பசுமைப் புரட்சி" என்றும் பெயர் சூட்டப்பட்டது.

விளைவு என்ன?

குடாநாடு உட்பட இலங்கையின பெரும்பாலான பகுதிகளின் வெப்ப நிலை இன்று அதிகரித்து விட்டது.

அத்துடன் குடாநாட்டில் கிடுகு வேலிகள், பனை ஓலை வேலிகள் எல்லாம் தற்போது மதில்களாக மாறிவிட்டன.

• வீதியால் செல்லும் ஒருவர் சற்று இளைப்பாறுவதற்கு மரநிழலைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமான காரியமாகவே உள்ளது.

"காட்டு வளம் பெருகினால் நாட்டு வளம் உயரும்" என்ற உண்மை தற்போது உணரப்பட்டுளளதால் மரம் நாட்டு விழாக்களும் ஆங்காங்கே நடைபெறுவது உண்டு. சில மரம் நாட்டு விழாக்கள் இப்படியும் அமைவதுண்டு.

"அது ஒரு அரச அலுவலகம். அன்று ஆண்டு நிறைவு விழா. மதவழிபாடுகள், கலைநிகழ்வுகள் என்பவற்றுடன் ஆண்டுதோறும் மரம் நாட்டு விழாவும் கொண்டாடப்படுவது வழக்கம். பிரதம விருந்தினர் வருகை தந்துவிட்டார். மரக்கன்றும் கொண்டுவரப்பட்டுவிட்டது. ஆனால் மரக்கன்றை எந்த இடத்தில் நாட்டுவது என்று விழாக்குழுவினர் சிந்தித்துக்கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் நீண்டகாலமாக அங்கு கடமையாற்றி வருகின்ற சிற்றூழியர் ஒருவர் ஒரு வெறுமையான கிடங்கைக் காட்டிச் சொன்னாராம், "ஆண்டுதோறும் இந்தக் கிடங்கில்தான் மரக் கன்றை நாட்டி வருகின்றோம்" என்று.

### ஓசோன் வாயுவும் ஓசோன் படலமும்

உயிரினங்களின் சுவாசத்துக்கு அவசியமான ஒட்சிசன் வாயுவைப் போன்றே ஓசோன் வாயுவும் ஒட்சிசன் அணுக்களாலானது. ஆனால ஒட்சிசன் வாயு மூலக்கூறு இரண்டு ஒட்சிசன் அணுக்களைக்கொண்டது. ஓசோன் வாயு மூலக்கூறு மூன்று ஒட்சிசன் அணுக்களைக் கொண்டது. எனவே ஒட்சிசன் வாயுவின் குறியீடு $O_2$ ஆகும். ஓசோன் வாயுவின் குறியீடு $O_3$ ஆகும்.

வளிமண்டலத்தில் ஓசோன் வாயுவானது கடல் மட்டத்தில் இருந்து ஏறக்குறைய 10 கிலோ மீற்றர் தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரையான நிலையான வளிமண்டலத்தில் காணப்படுகின்றது. பூமியின் வளிமண்டலத்தைச் சூழந்து பாதுகாப்புப் படையாகக் காணப படுவதால் 'ஓசோன் படலம்' என அழைக்கப் படுகின்றது.

### பூமியில் வாழும் உயிரினங்களின் பாதுகாப்புப்படையே ஓசோன் படலம்

பூமியில் வாழும் எல்லா உயிரினங்களினதும் முதற் சக்தி சூரியன் ஆகும். ஆகவே பூமியில் உயிரினங்களின் இருக்கைக்கு சூரிய ஒளி மிகவும் அவசியமாகின்றது. ஆனால் சூரிய ஒளிக் கதிருடன் மிகவும் சக்தி வாய்ந்ததும் உயிரினங்களுக்கு கூடுதலான பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதுமான ஊதா கடந்த கதிர்களும் வெளிவருகின்றன. ஊதா கடந்த கதிர்கள் (Ultra Vicletrays) சுருக்கமான முறையில் UV கதிர்கள் என அழைக்கப்படுகின்றன.

சூரிய ஒளிக்கதிருடன் UV கதிர்களும் பூமியை வந்தடைந்தால் மனிதன் உட்பட எல்லா உயிரினங்களுக்கும் கூடுதலான பாதிப்புக்கள் ஏற்படும. பெரும்பாலான உயிரினங்கள் அழிவடைய வேண்டிய நிலை ஏற்படும்.

ஆனால் ஓசோன் வாயுவானது UV கதிர்களை உறிஞ்சும் தன்மை உடையது. ஆகவே பூமியில் கடல் மட்டத்தில் இருந்து ஏறக்குறைய 10கிலோ மற்றர் தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரையான வளிமண்டலத்தில் காணப்படுகின்ற ஓசோன் படலமானது UV கதிர்கள் பூமியை வந்தடைவதைத் தடுக்கின்றது. அதாவது ஓசோன் படலமானது UV கதிர் போன்ற நச்சுக் கதிர்களிலிருந்து பூமியில் வாழும் உயிரினங்களைப் பாதுகாக்கும் பாதுகாப்புப் படையாகத் தொழிறபடுகின்றது.

### மனிதனின் தலையீடும் ஓசோன் படலத்தில் துவாரமும்

தற்காலத்தில் மனிதனின் பல்வேறுபட்ட செயற்பாடுகள் மூலம் வளிமண்டலத்தினுள் விடுவிக்கப்படுகின்ற நைத்திரஸ் ஒட்சைட் ($N_2O$) CFC என அழைக்கப்படுகின்ற குளோரோ புளோரோ காபன், CTC என அழைககப்படுகின்ற காபன ரெற்றாகுளோரைட் போன்ற இரசாயனப பதார்த்தங்கள் ஓசோன் வாயுவுடன தாக்கமுற்று ஓசோன் வாயுவை அழிப்பதனால் ஓசோன படலம் குறைகன்றது. இது ஓசோன் படலத்தில் துவாரம் (Ozone hole) என அழைக்கப்படுகின்றது.

### ஓசோன் படலம் அழிவடைவதால் ஏற்படும் தீமைகள்

ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்படுவதால சூரிய ஒளிக்கதிருடன் UV கதிர் போன்ற நச்சுக் கதிர்களும் பூமியை வந்தடைகின்றன. இதனால் பின்வரும் பாதிப்புகள் ஏற்படும்.

*தோல் கரும்புள்ளிகள், தோல் வயதடைதல்
*தோல் புற்றுநோய்
*கண்களில் கட்காசநோய் ஏற்படுதல். இதனால் கண்பார்வை அற்றுப்போதல்.
*மனிதனில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைதல். அதாவது மனித நிர்ப்பீடனத் தொகுதியின் செயற்பாடு பாதிக்கப்படுதல்.
*தாவரங்களின் வளர்ச்சி குன்றுதல். அதனால விளைவு குறைவடைதல்.
*UV கதிர்கள் சக்தி கூடியவை. ஆதலால் கடல நீரின் மிகக்கூடிய ஆழத்திற்கு ஊடுருவி தாவரப் பிளாந்தன்களை அழிக்கும். இதனால் கடல் வாழ் உயிரினங்கள் அழிவடையும்.
*கடல்வாழ் தாவரப் பிளாந்தன்கள் உட்பட பூமியின் தாவரங்கள் அழிக்கப்படுவதால் பூமியின வெப்ப நிலை உயரும். காலநிலை மாற்றங்கள் எதிர்பாராத விதமாக ஏற்படும் பனிக்கட்டிப் பாறைகள் உருகுவதனால் கடல் மட்டம் உயரும். இதனால் மாலைதீவு, இலங்கையின் சில கரையோரப் பிரதேசங்கள் கடல் நீரினால் மூழ்கும் அபாயம் ஏற்படும.

### ஓசோன் படலத்தைப் பாதுகாத்தல்

அபிவிருத்தியடைந்த நாடுகளில் பெரும்பாலானவை ஓசோன் படலத்தினை அழிக்கும் வாயுக்களை கூடுதலாக வெளிவிடுகின்றன என்ற கூறப்படுகின்றது. எனினும் அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தி யடைந்துவரும் நாடுகள் எல்லாம் ஒன்றிணைந்து ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான உலக மாநாடு 1985ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்றது.

ஓசோன் படலத்தினை அழிக்கும் பதார்த்தங்களை உற்பத்தி செய்தலைக் குறைப்பது தொடர்பாக மொன்றீயல் கூட்டு ஒப்பந்தம் 1987 இல கைச்சாத்திடப்பட்டது. ஓசோன் படலத்தினை பாதுகாப்பதற்கு பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

*CFC அற்ற குளிர்சாதனப் பெட்டிகள், காற்று ஒழுங்காக்கிகள் பயன்படுத்தல்.
*CFC அற்ற வாசனைத் திரவிய தூவிகள், கிருமி நாசினி விசிறு கருவிகளைப் பயன்படுத்தல்,
*ஹேலோன் தீயணை கருவிகள் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.
*குளிரூட்டிகளில் CFC இற்குப் பதிலாக HFC அல்லது அமோனியா பயன்படுத்தல்.
* ஹேலோன் தயாரிப்பதற்கு CFC இற்குப் பதிலாக ஐதரோ பென்ரேக் பாவிப்பு.
*போக்குவரத்து வாகனங்களில் ஓசோன் பாதிக்காத எரிபொருள் பயன்படுத்தல்.
*விவசாயத்துறையில் மெதையில் புரோனமட் (MeBr) பயன்படுத்துவதைக் குறைத்தல்.



மயில்வாகன சுவாமியின் 20ஆவது ஆண்டு குருபூசை தினத்தை முன்னிட்டு தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உடுபுடவை வழங்கப்பட்டன. முன்பள்ளி ஆசிரியர்களையும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ்சுவாமியையும் படதத்தில் காண்க.

படம்: மருதங்கேணி நிருபர்.



பருத்தித்துறை கொட்டடி கடற்தொழிலாளர் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் தையல் பயிற்சி நிலையத்திற்கு கெயர் நிறுவனத்தின் குழுத்தலைவர் ஜே.ஜி.இராஜேந்திரம் 25000ரூபா பெறுமதியான காசோலையை சங்கப் பொருளாளர் உமாவதியிடம் வழங்குவதையும் அருகில் தையல் ஆசிரியை, சங்கச் செயலாளர் மற்றும் கெயர் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

படம்: கற்கோவளம் நிருபர்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள

## விவசாயப் பயிற்சி நிலையத்தில் மூன்று நாள் விவசாயக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் மூனறு நாள் விவசாயக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சி எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை தினமும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

இக்கண்காட்சியின் முதல்நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மேலும் இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக வடக்கு கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஞானச்சந்திரனும், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக விவசாய பீடாதிபதி எஸ்.இராஜதுரை, பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம், கமநல சேவைகள் திணைக்களத்தின உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேநதிரம, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் க.இராமநாதன், விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி செ.விஜயரததினம் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

இக்கண்காட்சியின் பிரதான அம்சங்களாக நுண்நீர்ப்பாசனத் தொழில்நுட்பங்கள், வீதி முறைப் பயிச்செய்கை, வீட்டுத்தோட்டம், கொள்கலன பயிர்ச்செய்கை, கொள்கலன் நாற்று உற்பத்தி, பழப்பயிர்கள் நடுகைமுறை, ஒட்டு முறை பராமரித்தல், நாற்றுமேடை தொழில்நுட்பம், புதிய இனப் பயிர்கள், ஒவ்வாத கால நிலையில் பெறுமதிமிக்க பயிர் உற்பத்தி, பழப் பயிர் பாதுகாப்பில் நவீன தெளிகருவிகள், விவசாய விளைபொருட்களின் பெறுமதி அதிகரிப்பு, விவசாய ஆராய்ச்சி நிலைய செயற்பாடுகள், வானிலை அவதான நிலைய செயற்பாடுகள, காலைநடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள செயற்பாடுகள் மற்றும் தென்னை அபிவிருத்தி என்பன தொடர்பிலான விளக்கங்கள் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

இவ் விவசாயக் கண்காட்சி சகல விவசாயிகளுக்கும், விவசாயக்கல்வி பயிலும் மாணவாகள் மற்றும் ஏனையவர்களுக்கும் பயனுள்ளதாக அமையும். (ரு-19)

## தமிழ்த்தின விழா

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய தமிழத்தின விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் மன்றத் தலைவர் செல்வன் செ.செந்தூரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இவ்விழாவில் ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளரும், தினக்குரல் பிரதி ஆசிரியருமான கோ.சி.வேலாயுதம் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற ஆசிரியைகள் திருமதி இ.சோமசுந்தரம், திருமதி ம.அருந்தவராசா, திருமதி ச.முத்துலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் சிறுவர் நாடகம்; வில்லிசை போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளும், சினிமாத் திரைப்படப் பாடல்கள் இலக்கியத் தரம் வாயந்தவையா? அற்றவையா? எனும் விடயம் பற்றிப் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளன. (ரு-2)

# வீரப்பன் வாழ்வும் வதமும்


## மீள் பார்வை

என். சொக்கன் 23

ஆனால், வீரப்பன் பிரச்சினை பெரிதான பின், அவனுடைய கடத்தல்களுக்கான வழிகள் அனைத்தையும், தமிழ்நாடு மற்றும் கர்நாடக அதிரடிப்படையினர் ஒவ்வொன்றாக அடைக்கலானார்கள். இதன்மூலம், வீரப்பனின் கோஷ்டிக்குக் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதாகவும, அவன் வேறு வழிகளில் பணம் சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

அப்போதுதான் வீரப்பனுக்கு 'ஆள் கடத்தல்' யோசனை உதித்திருக்கிறது. காட்டுக்குள் பணிபுரியும் வனத்துறை அதிகாரிகள் அல்லது காட்டு எல்லையில் வசிக்கக்கூடிய பணக்காரர்கள் பிரபலங்களைக் கடத்தி அவர்களைப் பணயமாக வைத்துக்கொண்டு பணம் பறிக்கலாம் என்று திட்டமிட்டிருக்கிறான் அவன்.

நமக்குக் கிடைத்திருக்கும் தகவல்களின்படி வீரப்பன் தன்னுடைய முதலாவது ஆள் கடத்தலில் ஈடுபட்டது. 1992ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கர் நாடகத்தைச் சேர்ந்த கல் குவாரி உரிமையாளர் சம்பங்கி ராமய்யாவின் மகனைக் கடத்திச் சென்றான் வீரப்பன்.



இதையடுத்து ஒரு கோடி ரூபாய் கொடுத்தால்தான் ராமய்யாவின் பையனை விடுதலை செய்யமுடியும் என்று தகவல் அனுப்பினான் வீரப்பன். அதன்பின் பதினைந்து இலட்சம் ரூபாவை மட்டும் பெற்றுக்கொண்டு அவனை விடுவித்துவிட்டான்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு ஆள் கடத்தலின் மூலம் நன்றாகப் பணம் சம்பாதிக்க முடியும் என்ற எண்ணம் வீரப்பனுக்கு வலுப்பட்டது. ஆகவே தனக்குப் பணம் தேவைப்பட்ட போதெல்லாம் இப்படி ஏதேனும் ஒரு கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டான் அவன். பின்னர் ஆள்களைக் கடத்துவதன் மூலம் வேறு சில விஷயங்களைய்யும் சாதிக்கலாம் என்று வீரப்பனுக்குப் புரிந்தது. அதையும் அவன் சரியாகப் பயன்படுத்திக் கொண்டான்.

இப்படி ஆள்களைக் கடத்தி வருவதில் வீரப்பனுக்கு ஒரு மிகப் பெரிய சவுகர்யம் இருந்தது. பல ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவுக்கு விரிந்திருந்த அந்தக் கானகத்தை வீரப்பன் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தான். பறவைகள் விலங்குகளின் சத்தத்தில் தொடங்கி தரையிலும் வானத்திலும் தென்படக்கூடிய அத்தனை சகுனங்களும் அவனுக்கு அத்துப்படி. இவை எல்லாவற்றுக்கும் மேலாக போலீஸ் கண்ணில் படாமல் ஒளிந்து வாழ்வது எப்படி என்று ஒரு தலையணை சைஸ் புத்தகமே எழுதக்கூடிய அளவுக்கு அனுபவம் பெற்றிருந்தான் அவன்.

இதனால் வீரப்பன் யாரையாவது கடத்திக்கொண்டு வந்தால் அவர்களை யாராலும் கண்டுபிடித்து மீட்கமுடியாது என்கிற நிலைமை வீரப்பனாகப் பார்த்து அவர்களை விடுவித்தால் தான் உண்டு. மற்றபடி அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதும் வீரப்பனைப் பிடித்துச் சிறையில் அடைப்பதும் ஒன்றுதான்.

இந்த வசதியைப் பயன்படுத்திக் கொண்டு தனது கடத்தல் நாடகங்களைத் தைரியமாக அரங்கேற்றினான் வீரப்பன். இந்தக் காலகட்டத்தில் வீரப்பனால் கடத்தப்பட்டவர்களைப் பற்றி இரண்டாவது அத்தியாயத்தில் நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். ஆகவே முக்கியமான சில கடத்தல்களின் போது வீரப்பனுக்கு எவ்வளவு பணம் கிடைத்தது என்ற விவரத்தை மட்டும் இங்கே பார்க்கலாம்.

1995ஆம் ஆண்டு அந்தியூர் வனப்பகுதியில் இருந்து மூன்று வனத்துறை அலுவலர்களைக் கடத்தினான் வீரப்பன். அவர்களை விடுவிக்க வேண்டுமானால் ஐந்து கோடி ரூபாய் தர வேண்டும் என்று தகவல் அனுப்பினான். ஆனால் அப்போது வீரப்பனுக்குத் தரப்பட்ட தொகை மூன்றரை இலட்சம்தான் என்று தெரிகிறது.

இரண்டு ஆண்டுகள் கழித்து 1997ஜூலையில் கர்நாடக வனத்துறையைச் சேர்ந்த பத்துப் பேரைக் கடத்தினான் வீரப்பன். இவர்களில் இருவரைச் சீக்கிரமே விடுவித்து விட்டான். மற்றவர்களை விடுதலை செய்ய வேண்டுமானால் ஐந்து கோடி ரூபாய் பணம் தரவேண்டும என்று கேட்டான். ஆனால் இந்தத் தொகை அவனுக்கு வழங்கப்பட்டதாகத் தகவல் எதுவும் இல்லை.

இப்படிப் பலவிதமான சிறு கடத்தல்களுக்குப் பின் ,2000ஆம் ஆண்டு கன்னட நடிகர் ராஜ்குமாரைக் கடத்திச் சென்றான் வீரப்பன். அதன்பின் நூறு நாள்களுக்கு மேல் நீண்ட மீட்புப் பேச்சு வார்த்தைகளை அடுத்து ராஜ்குமார் விடுதலை செய்யப்பட்டார்.

ராஜ்குமாரை வீரப்பன் ஏன் கடத்தினான்? பிறகு திடீரென்று ஏன் விடுவித்துவிட்டான்? இந்தக் கேள்விக்கான பதில் ஒரு மர்ம முடிச்சாகவே இருக்கிறது. ராஜ்குமாரை விடுவிப்பதற்கு வீரப்பனுக்குப் பெருந்தொகை தரப்பட்டதாக சிலர் சொல்கிறார்கள். ஆனால் அப்போதைய தமிழக கர்நாடக அரசுகளும் இதை மறுக்கிறன்றன.

சுவராஸ்யமான இந்த விவாதத்தில் முக்கியமான ஒரு சாட்சி, சி. தினகர் எழுதிய புத்தகம்தான்.

தினகர் வீரப்பனைத் தேடும் அதிரடிப் படை நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டவர் அல்ல. என்றாலும் ராஜ்குமாரை வீரப்பன் கடத்தியபோது மாநில காவல்துறை தலைவராக இருந்தவர் என்பதால் ராஜ்குமார் மீட்பு நடவடிக்கைகள் அனைத்திலும் இவருக்குப் பங்கு இருந்தது.

தனது காவல்துறைப் பொறுப்புகளில் இருந்து ஓய்வு பெற்ற பின் வழக்கறிஞராகத் தொழில் புரியும் தினகர் ராஜ்குமார் கடத்தப்பட்டதில் இருந்து அவர் விடுதலையானது வரையிலான 108 நாள் சம்பவங்களை பல நுணுக்கமான தகவல்களுடன் இந்த நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

தினகரின் இந்தப் புத்தகம் வெளியானபோது கர்நாடகத்திலும் தமிழகத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது . ஏனெனில் ராஜ்குமாரை விடுதலை செய்வதற்காக வீரப்பனுக்குப் பணம் எதுவும் தரப்படவில்லை என்று இரண்டு மாநில அரசுகளும் சொல்லிக் கொண்டிருந்த சூழ்நிலையில் கிட்டத்தட்ட இருபது கோடி ரூபாய் பணம் கைமாறி பிறகுதான் ராஜ்குமாரை வீரப்பன் விடுவித்தான் என்று ஆணித்தரமாக எழுதியிருந்தார் தினகர்.

வெறுமனே ரூபாய்க் கணக்கு மட்டுமன்றி எத்தனை தவணைகள், எப்போது யாரால் பணம் திரட்டப்பட்டது, யார் மூலமாக அந்தப் பணம் வீரப்பனுக்கு அனுப்பப்பட்டது.

இந்த விஷயம் யாருக்கெல்லாம் தெரியும், யாருக்கெல்லாம் தெரியாது என்பது போன்ற பல உள் விவரங்களையும் விளக்கமாகப் பட்டியலிட்டிருந்தது இந்த நூல்.

இதன்படி மொத்தம் நான்கு கட்டங்களில் இருபது கோடி ரூபாய (ஆனால் இதில் பதினெட்டு கோடி ரூபாய்தான் வீரப்பனுக்காக தரப்பட்டதாம். மிச்சமிருக்கும் இரண்டு கோடி ரூபாயை டாக்டர் பானு கொளத்தூர் மணி மற்றும் ஏ.பி. சண்முகசுந்தரம் ஆகியோர் பகிர்ந்து கொண்டார்களாம்) பணம் வழங்கப்பட்டதாகச் சொல்கிறார் தினகர்.

*(தொடரும்)*

# சிறைச்சாலைகளில் இலஞ்ச ஊழல்; முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாம்

(கொழும்பு)

சிறைக்கைதிகளை நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லும்போது சிறைச்சாலை அதிகாரிகள் இலஞ்சம் பெறுவது உட்பட தேவையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பாக பொலிஸ் தலைமையகத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களுக்குக் கொண்டுசெல்லப்படும் சிறைக்கைதிகளை பார்வையிடுவதற்கு செல்லும் உறவினர்கள், நண்பர்களிடம் சிறைச்சாலை அதிகாரிகள் இலஞ்சம் பெற்று வருகின்றமை குறித்து தகவல் கிடைத்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சீஸரணவீர தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் உள்ள நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகளின் பாதுகாப்புத் தொடர்பாக பொலிஸ் தலைமையகம் நடத்திய ஆய்வுகளின் போது இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதுதவிர, கால அவகாசமின்றி சிறைக்கைதிகளின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் நீதிமன்றத்தில் சந்திப்பதற்கும் சோதனையின்றி ஆகாரங்கள் உட்பட பல்வேறு பொருட்களை வழங்குவதற்கும், சிறைச்சாலை அதிகாரிகள் அவகாசம் வழங்கி வருவதாக ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிகள், ஆயுதங்கள், செல்லடக்கத் தொலைபேசிகள் போன்றன உணவுப்பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டு கைதிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மேல் மாகாணம், அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பிரதேசங்களிலேயே இத்தகைய சம்பவங்கள் பெருமளவில் இடம்பெற்று வருகின்றது.

அண்மைக் காலங்களில் நீதிமன்ற வளவுக்குள் இடம்பெற்ற துப்பக்கிச சூட்டுச் சம்பவங்கள், கொலைகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய நபர்களுக்கும் இவ்வாறான முறையில் துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)

# பேச்சு மேசைக்கு வரவேண்டியது விடுதலைப்புலிகளின் பொறுப்பு

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக நட்புறவிலான தீர்வொன்றினைக் காண்பதற்கு பேச்சுவார்த்தைக்கு சமுகமளிக்க வேண்டியது விடுதலைப் புலிகளின் பொறுப்பாகும் எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இநதியப் பாதுகாப்புக் கல்லூரியைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்றுக்காலை தனது அமைச்சில் சந்தித்து உரையாடிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு இந்நாட்டில் அவர்கள் விரும்பும் எந்தப் பகுதிக்கும் செல்வதற்கு எவ்வித தடையுமில்லை.

யுத்தத்தினை மக்கள் விரும்பவில்லை. சமாதானச் சூழ்நிலை ஒன்றை உருவாக்கும் பொறுப்பும், தேவையும் அரசாங்கத்திற்கு இருக்கின்றது.

அரசாங்கத்தின் நிதி விடுதலைப் புலிகளின் பிரதேசங்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கும், அபிவிருத்தி நடவடிக்ஷைகளுக்கும் பயன்படுத்தப் படுகின்றன என்றார்.

குறிப்பிடப்பட்ட அந்த நிதி சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்களின் ஊடகவே செலவிடப்பட்டு வருகின்றது. இன்று வடக்கு-கிழக்கு அரசியல் வாதிகளின் சுதந்திரத்திற்கு பலதரப்பட்ட தடைகள் ஏற்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தரர். (ச-4)






நல்லூர்க் கந்தன் பாமாலை வெளியீட்டு விழா கடந்த முதலாம் தகதி யாழ். மத்திய கல்லூரி இந்துமன்ற அனுசரணையுடன் கல்லூரி தம்பர் மண்டபத்தில் கல்லூரி பிரதி அதிபர் எஸ். பத்மநாதன் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பாமாலையை இயற்றிய யாழ். வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா. வரதராசாவுக்கு தெய்வக் கவிமணி என்ற கௌரவப் பட்டத்தினை அருட்கவி சி. வினாசித்தம்பி வழங்கி கௌரவிப்பதனை முதலாவது படத்திலும்,

பாமாலையினை இசை அமைத்துப் பாடிய இசைக் கலாவித்தகர் சிவஸ்ரீ உமாரமணக் குருக்கள் ஒரு சில பாடல்களைப் பாடிய நிகழ்வினையும் அவருடன் கல்லூரி ஆசிரியை திருமதி செந்தில்ராசா, கல்லூரி மாணவன் செல்வன் சிவமைந்தன் ஆகியோரும் இணைந்து பாடும் நிகழ்வினை இரண்டாவது படத்திலும் காணலாம்

பழகிய செல்வமும் பண்பும் கெடும்
கழகத்துக்கு காலை புகின் -குறள்

வலம்புரி

## அரச அதிகாரிகளால் பட்டதாரிகள் படும்பாடு

வேலையற்ற பட்டதாரிகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டபோதிலும் அதில் ஏற்பட்ட குத்துவெட்டுக்கள், குழறுபடிகள் பட்டதாரிகளை குழப்பியுள்ளது.

படித்த பட்டத்திற்கும் வழங்கப்பட்ட வேலைக்கும் எந்தத்தொடர்பும் இல்லாத நிலைமை ஒரு புறம். மறுபுறத்தில் பட்டதாரிப் பயிலுநர்கள் என நியமனம் பெற்றவர்கள் தங்களின் கடமை என்ன என்பதைக் கூட புரிந்துகொள்ள முடியாமல் தத்தளிக்கின்றனர்.

சுருங்கக்கூறின் வெறும் மேசைக்கு முன்னால் பயிலுநர் என்ற பெரில் பட்டதாரிகள் குந்தியிருக்கின்றனர்.

நான்கு வருடங்கள் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்களுக்கு பொருத்தமற்ற வகையில் நியமனங்களை வழங்கி மனித மூலதனத்தை வீணடிக்கும் நடவடிக்கைகள் எதிர்கால முகாமைத்துவ திறனை செயலிழக்கச் செய்துவிடும்.

நிலைமை இவ்வாறிருக்கும்போது பட்டதாரிகளில் இருந்து ஆசிரியர்களை தெரிவுசெய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சை-பரீட்சை முடிபுகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்கள் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டன.

ஏற்கனவே பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியராக நியமனம் பெற்றவர்களை ஆசிரிய சேவைக்குள் உள்வாங்காமல் வேறு திணைக்களங்களில் பயிலுநர்களாக இருந்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கியமையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக ஆசிரிய நியமனம் கிடைக்காத பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை உருவாகிற்று.

இலங்கையில் அரச வேலை வாய்ப்பைப் பெறுவதென்றால் போராட்டம் நடத்தவேண்டுமென்பது தவிர்க்கமுடியாத நியதி.

இப்போது அந்த நிலையை நிரந்தர நியமனத்திற்கும் நடைமுறைப்படுத்தவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் நிரந்தரமாக்கப்படுவதற்குமென எல்லாவற்றுக்குமே மறியல்போராட்டங்களை நடத்துவதற்கான களநிலைகளை அரச அதிகாரிகள் ஏற்படுத்தி விடுவது ஓர்போராட்ட உணர்வுடைய உத்தியோகத்தர்களை உருவாக்கிவிடுகின்றது.

ஆக முகாமைத்துவ திறனற்ற- ஆழ்ந்த சிந்தனையூடான திட்டமிடல் இல்லாத முடிபுகளால் வழங்கப்பட்ட கடமைகளை பொறுப்புடன் நிறைவேற்றவேண்டிய பட்டதாரிகள் இன்று நடுத்தெருவில் நின்று மறியல்போராட்டம் நடத்தவேண்டியதாயிற்று.

எனவே இனிமேலாவது பட்டதாரிகளின் நியமனங்களில் அரச அதிகாரிகள் நிதானமான முடிபுகளை எடுக்கவேண்டும்.

# பிரபாவுடன் நேரடிப் பேச்சுவார்த்தை இணக்கப்பாட்டின் பின்பே இறுதித்தீர்வு

## பிரதமர் மஹிந்த ரொய்ட்டருக்கு செவ்வி



(கொழும்பு)

விடுதலைப்புலிகளினூடாக சமாதான முன்னெடுப்புகளில் புதிய அணுகுமுறை தேவை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். தான் ஜனாதிபதியானால் அரசியல் எதிரிகளையும் இணைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித துள்ளார்.

ரொய்ட்டா செய்தி நிறுவனத்தின் செய்தியாளர் சிமன் கார்னருக்கு நேற்று முன்தினம் வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2002இல் இருந்து நடைமுறையில் இருக்கும் போர் நிறுத்தத்தினை நிரந்தர சமாதானத்திற்கு கொண்டுசென்று இரு தசாப்த கால யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவருவதற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் முன்னுரிமை கொடுக்கப்படும எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமாதான எதிர்ப்புகளுக்கு கருத்து ஒருமைப்பாடு அவசியம் எனக் கூறும் அவர் மீண்டும் யுத்தத்திற்கு திரும்புவது தனது தேர்வு அல்ல என்றும் தெரிவித்திருக்கின்றாா.

தெற்கில் கருத்தொருமைப்பாடு காணப்படாவிட்டால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீவு காணமுடியாது. சமாதானப் பேச்சை நாம் மீள ஆரம்பிக்க வேண்டும் அதேநேரம் பெரும்பான்மையாகவும் உள்ள சிங்கள மக்களை நாம் திருப்திப்படுத்த வேண்டியுள்ளது என்பதை விடுதலைப்புலிகள்உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம்.

சிங்கள மக்கள் இல்லாமல் எந்த நடவடிக்கைகளையும் எங்களால் முன்னெடுக்க முடியாது. சகல கட்சிகளுக்கும் இது தொடர்பான பொறுப்பு உண்டு. நாம் ஒன்றுபட்டு புதிய அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியாகியவுடன் பாராளுமன்றத்தேர்தல் நடைபெறுவது குறித்து முடிவு எடுப்பதை நாம் பாராளுமன்றத்திடமே விட்டு விடுவேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலாவது விடயம் நான் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் நேரடிப்பேச்சுவார்த்தை நடத்துவேன் அவருடன் பேசி நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையை கைக்கொள்ளவேண்டும்.

இருதரப்பும் இணக்கப்பாடு ஒன்றுக்கு வரவேண்டும் இதன் பின்னர் இறுதித்தீர்வுக்குச் செல்லலாம். இது ஏன் எம்மால் முடியாது? என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (ற)

# பண்டா - சிறிமா - ஜே.ஆரின் வழியிலேயே ஜே.வி.பி- மஹிந்த-ஹெல உறுமய ஒப்பந்தம்

## சுட்டிக்காட்டுகிறார் சோஷலிச சமத்துவக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜய் டயஸ்

(கொழும்பு)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் செய்துகொண்ட ஒப்பந்தமானது இலங்கை 20 வருட கால யுத்தத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்பையே வழங்கியிருப்பதாக சோஷலிச சமத்துவக்கட்சி தெரிவித்துள்ளது.

சோஷலிச சமத்துவக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜய் டயஸ் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருப்பதாக உலக சோஷலிச இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் இடைக்கால தன்னாட்சி பேச்சுவார்த்தை ஆழிப்பேரலையின் பின்னரான பொதுக்கட்டமைப்பு நோர்வே நாட்டின ஏற்பாட்டாளர் நிலை ஒற்றையாட்சி முறை மற்றும் போர் நிறுத்த உடன்படிக்கையை திருத்தியமைத்தல் போன்ற ஏற்பாடுகள் போருக்கான மையங்களாக உள்ளதாக விஜய் டயஸ குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் ஒப்பந்தங்களை செய்துகொண்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி சமாதானம் காணப்போவதாக கூறுவதையும் டயஸ் விமர்சித்துள்ளார். அதேநேரம் சமாதானமே தமது கொள்கையாக உள்ளபோதும் போர் ஒன்று ஆரம்பிப்பது என்பதற்காக தாம் பயப்படவில்லை என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஷ அமரசிங்க தெரிவித்துள்ளமையை டயஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

1956 முதல்1959 ஆம் ஆண்டு வரை பிரதமராக இருந்த இன்றைய ஜனாதிபதியின் தந்தை டயஸ் பண்டாரநாயக்க கொண்டுவந்த "சிங்களச் சட்டம்" ஜனாதிபதியின் தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்க 1972ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்திய இனத்துவ அரசியல் அமைப்பு 1983ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் ஆட்சியில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான இனவன்முறை என்பவற்றுக்கு அடுத்த கட்டமே பிரதமருக்கும் ஜே.வி .பிக்கும் இடையிலான ஒப்பந்தம் என சோஷலிச சமத்துவக்கடசி கருதுவதாக டயஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-9)

# யுத்த நிறுத்த ஒப்பந்தத்தினால் புலிகள் பலனடைந்துள்ளனராம்

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள இந்தியப் பாதுகாப்புத்துறை பயிற்சிக்கல்லூரியின குழுவினரிடம் இது குறித்து ரட்ணசிறி விக்கிரமநாயக்க உரையாடினார்.

அலோக் ஜெயின் மற்றும் டி.கே. திவானி தலைமையிலான இந்தியக் குழு கொழும்பு வந்துள்ளது.

இக்குழுவிடம் பேசிய ரட்ணசிறி விக்கிரமநாயக்க யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளே பயனடைந்துள்ளனர். இலங்கையின் தேசிய நலன்களை கருத்தில் கொள்ளாமல் ஒரு பக்கச்சார்பாகவே இந்த ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் இந்தக் குரல் ஜே.வி.பி மற்றும ஜாதிக ஹெல உறுமயவுடனான மஹிந்த ராஜபக்ஷவின ஒப்பந்தத்திற்கு ஆதரவுக்குரலாக வெளிப்பட்டுள்ளது.

ஐ.நாசபை உள்ளிட்ட இன்னொரு சர்வதேச அமைப்பு இனப்பிரச்சினையில் தலையிடுவதை தான் விரும்பவில்லை என்றும் பேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப் புலிகள் திரும்புவதற்கும் சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் விக்கிரமநாயக்க வலியுறுத்தினார்.

இலங்கையில் தமிழர்களைப் பொறுத்தவரை சுதந்திரமாகத்தான் வாழுகிறார்கள். கொழும்பில் கூட அவர்கள் சுதந்திரமாகவே இருக்கிறார்கள். தேசிய விடுதலைப்போராட்டம் என்பதெல்லாம் இல்லை என்றும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கமானது வடக்கு-கிழக்குப்பகுதிகளுக்கும் உரிய நிதி ஒதுக்கீடு செய்து அரசு செயலகங்கள் மூலம் வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. விடுதலைப் புலிகள் வரி அறவிடுதல் என்பது அவர்களது நடவடிக்கைக்கானது என்றார் விக்கிரமநாயக்க.

இந்த விவாதங்களின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் குறிததும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் குறித்தும் தமிழீழத் தேசிய தலைமை குறித்தும் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மோசமான விமர்சனங்களைத் தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பின் போது ஓய்வுபெற்ற பாதுகாப்புத்துறை செயலாளர் அசோகஜெயவர்த்தன,முப்படைத்தளபதி தயா சந்தகிரி மற்றும் முப்படைகளின் தளபதிகள் உடன் இருந்தனர்.

இந்தியக் குழுவின் இலங்கைக்கான திடீர் வருகை ஏன் என்பது குறித்தும் தற்போதைய சிக்கலான சூழலில் இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்தும் சர்வதேச நாடுகள் அவதானித்து வருகின்றன. (ற)

## "அறிஞர் அண்ணாவின் சினிமா பிரவேசம"

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின ஆதர வில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தென்றல் அலை வரிசையில் வாராந்தம் வெள்ளிக்கிழமை பிறபகல் 3.00 மணிமுதல் 4.00 மணிவரை இடம்பெறும் "திரைத்தென்றல்" வானொலி நிகழ்ச்சியில் இன்று "அறிஞர் அண்ணா" என அனைவராலும் அழைக்கப்படும் சி.என். அண்ணாதுரை ஜனனத்தினத்தை ஒட்டி அவரின் சினிமாப் பிரவேசம் பற்றிய சிறப்பு நிகழ்ச்சியாக பல அரிய அவசிய தகவல்களை உள்ளடக்கி ஒலிபரப்பாகவுள்ளது. (ற)

## தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

இந்த உலகம்தான் வாழ்வின் இலட்சியமா? வேறு ஒன்றும இல்லையா? நாம் இப்போது இருப்பது போல் தான் இருக்க வேண்டுமா? இதற்கு மேலாக இருக்க வேண்டாமா? எந்தத்தடையும் இல்லாமல் சுலபமாக ஓடுகின்ற ஒரு எந்திரமாக இருக்க வேண்டியவனா மனிதன்?

சுவாமி விவேகானந்தர்

# திலீபனின் நினைவு நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நேற்று அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்.கேணல் திலீபனின் 18வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று காலை 10மணிக்கு தியாகி லெப்.கேணல் திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் இடம் பெற்றது. யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.சிவராசா தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வணிகபீடத் தலைவர் பேராசிரியர் க.தேவராசா, யாழ்ப்பாணம் நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் சிவஞானசுந்தரம், அதிபர் ந.பாலகுமார், மாவீரர் கப்டன் சரத்பாவுவின் தந்தையார் க.கந்தசாமி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

ஈகச்சுடரினை யாழ்ப்பாணம் மாநகரசபை செயலாளர் திருமதி வ.வசந்தகுமார், தென்னிந்திய திருச்சபை வணபிதா இ.ஜெயக்குமார், யாழ்ப்பாணம் சிக்கனகடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் க.சிவசுப்பிரமணியம், நல்லூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் செல்வி த.பேரம்பலம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை யாழ்ப்பாணம் தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சொலமன் சூ.சிறில் ஏற்றி வைத்தார். தியாகி லெப்.கேணல் திலீபனின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையை யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் அணிவித்தார்.

நினைவுரையை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளர் மா.இளம்பிறையன், க.கனகலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். (ச-4)

# பிரதமரின் வங்கி மீதிகளை விசாரிக்க போலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிதி மோசடிப் புகாரையடுத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வங்கிக் கணக்குகள் தொடர்பாக பொலிசார் விசாரணை நடத்த நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குற்றத்தடுப்பு திணைக்களத்துக்கு இதற்கான அனுமதியை கொழும்பு பதில் நீதிபதி ஜயந்த தியாஸ் நாணயக்கார வழங்கியுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு கோட்டை நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்த மனுவை நேற்று ஆராய்ந்த பின்னர் பதில் நீதிவான் ஜயந்த டயஸ் நாணயக்கார இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

ஹெல்பிங் அம்பாந்தோட்டை எனும் கணக்கை பராமரித்து சுனாமி நிவாரண நிதியை அந்தக் கணக்கில் வரவு வைத்து அரசாங்க தொடர்பாக சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளமை குறித்து பலரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத்திணைக்களம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக விரிவாக விசாரணைகளை நடாத்தி சந்தேக நபர்களை கைது செய்வதற்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியிருப்பதாகவும் மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆழிப்பேரலைக்காக கிடைக்கப்பெற்ற சர்வதேச நிதியை தனது சொந்த வங்கிக் கணக்குக்கு பிரதமர் மாற்றிய செய்திகளை ஊடகங்கள் ஆதாரத்தோடு அம்பலப்படுத்தின.

ஆனால் 82.5 மில்லியன் ரூபாய் மகிந்தவின் கணக்குக்கு மாற்றப்பட்டது உண்மையானாலும் அதிலிருந்து ஒரு சதம் கூட மகிந்த எடுக்கவில்லை என்று அவரது செயலாளர் வீரதுங்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் கொழும்பு நீதிமன்றம் மகிந்தவின் வங்கிக் கணக்குகள் தொடர்பாக விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ச-8,04)

# சிவராம் கொலைக்குற்றவாளிக்கு விளக்க மறியல் நீடிப்பு

மாமனிதர் ஊடகவியலாளர் சிவராம் கொலைச் சந்தேக நபரான சிறீஸ்கந்தராஜாவின் விளக்கமறியல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. கடுவெல நீதிமன்றில் நேற்று முன்தினம் நீதிபதி சாம்ப ஜானகி ராஜரட்ண முன் னிலையில் சிறீஸ் கந்தராஜா முற்படுத்தப்படுவதாக இருந்தது. ஆனால் பாதுகாப்பு காரணங்களைக் காரணம் காட்டிஅவர் முற்படுத்தப்படவில்லை.

நீதிமன்றுக்குவந்திருந்தகொழும்பு குற்றத் தடுப்பு அதிகாரி ராஜபக்ச இந்த வழக்கின் விசாரணைகள் இன்னும் முடிவடையவில்லை என்று தெரிவித்தார். இதனையடுத்து அவரை எதிர்வரும் 27ந் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

# பல்கலைக்கழக சமூகத்தினால் பொங்கு தமிழ் பிரசாரங்கள்

(யாழ்ப்பாணம்)

பொங்குதமிழ் எழுச்சிப்பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் நேற்றுக்காலை தொடக்கம் மாலை வரையும் பல்கலைக்கழக மாணவர்களால் திருநெல்வேலி , கோப்பாய், நீர்வேலி ஆகிய இடங்களில் வீடுவீடாக பெரும் எடுப்பில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பொங்குதமிழ் தொடர்பான சகல விளக்கங்களும் தருவதே இதன் பிரதான நோக்கமாக கருதப்பட்டது. நேற்றுப் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றில் பீடாதிபதிகள், துணைவேந்தர் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பொங்கு தமிழுக்கான ஏற்பாடுகளுக்கான பல ஆலோசனைகளை முன்வைத்தனர்.

இதேவேளை இனி வரும் தொடர் தினங்களில் மாணவர்கள் தொடர்ச்சியாக பிரசார பணிகளில் ஈடுபடவுள்ளனர். யாழ்.நகரில் சகல இடங்களிலும் ஏற்பாடுகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு செல்கின்றன. (ச)

# மனித உரிமைகள் தொடர்பாக கிளிநொச்சியில் செயல் அமர்வு

(கிளிநொச்சி)

தமிழ் மக்களின் மனித உரிமைகள் பற்றிய விசேட செயலமர்வு நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினால் இச் செயலமர்வு நடத்தப்பட்டது. மனித உரிமைகள் செயலக பணிப்பாளர் அருட் தந்தை ம.சே.க்ருணாரட்ணம் அடிகளாரின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்த செயலமர்வில் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பாகவும் அவை மீறப்படும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டு தீர்வை பெறுவது என்பது பற்றியும் மக்களை பாதிக்கும் சில அடிப்படை மனித உரிமை மீறல்கள் சர்வதேச மனித உரிமை பிரகடனங்கள் சிறுவர் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தங்கள் சிறுவர் தொழிலாளர் ,சிறுவர் போராளிகள், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள், சிறுவர் கொடுமைப்படுத்தப்படல் போன்ற விடயங்கள் பற்றியும் அருட்தந்தை விரிவாக விளக்கினார். (ச-4)

# சமாதானப் பேச்சில் புலிகளை...

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் பங்கு பற்றுவதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி நேற்று முன்தினம் ஆசிய சங்கப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தைகளுக்காக விடுதலைப் புலிகளை இணைத்துக் கொள்வதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு அவசியம் அப்போதுதான் விடுதலைப் புலிகள் அமைப்புடன் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றார் ஜனாதிபதி.

எனது அரசாங்கத்திடம் புலிகளுக்கு எதிராக யுத்தத்தை நடத்தக்கூடிய சூழ்நிலையிருந்தபோதும் நாம் அதனை விட வேறு வழி முறையை கையாண்டோம் .ஆனால் அந்த முயற்சிகள் பெரிதும் பலன் அளிக்கவில்லை. இந்த நிலையிலேயே புலிகள் அமைப்பை சமாதான பேச்சுவார்த்தைகளில் மீளவும் இணைத்துக் கொள்வதற்கு சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பு, பங்களிப்பு தற்போது தேவையாகவுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.

இலங்கையில் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்கு மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கான வாய்ப்புகளை சர்வதேச சமூகம் ஏற்படுத்திதருமென ஏற்படுத்த தரவேண்டுமென நம்புகின்றோம். இது சர்வதேச சமூகத்தின் கடமையாக இருக்க வேண்டும் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

நடைபெறப் போகும் ஜனாதிபதி தேர்தலின் மூலம் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படுபவர் சமாதான முயற்சிகளில் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பிக்க முடியும்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான அமைதி முயற்சில் அதிகாரப் பரவலாக்கம் முக்கியமானதாக இருக்கிறது.

இலங்கையின் அனைத்து இனத்தவருக்கும் சம அளவிலான அதிகாரம் அளிக்கும் வகையில் அனைவரையும் உள்ளடக்கியதாக அரசின் ஒற்றையாட்சி. முறையானது கூட்டாட்சி அல்லது பன்முகத் தன்மை கொண்ட அரசாக மாற்றப்பட வேண்டியது இயற்கையானது

தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவ அமைப்பாக இருப்பதை விட ஒரு அரசியல் சக்தியாக இருந்தால்தான் அந்த அதிகாரப் பகிர்வு சாத்தியமான ஒன்றாகும்

அதிகாரப் பகிர்வை ஏற்றுக் கொள்ளாமல் அரசியல் கட்சிகள் எதிர்த்தால் அது விடுதலைப் புலிகள் மீண்டும் ஆயுதப் போராட்டத்தை நடாத்துவதற்குத்தான் துணைசெய்யும்.

மூன்று தசாப்தகால யுத்தப் பலிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க கூட்டாட்சி முறையை ஏற்பது ஒன்று தான் சரியானதாக இருக்க முடியுமென்று ஜனாதிபதி கூறினார். (ச-8)

## சமூக சீரழிவில்...

பாகங்களிலும் நாம் 'காணும் அனைத்து அகமுரண்பாட்டு தூண்டுதல்களின் பின்னாலும் எதிரிகளின் கைகள் மறைந்திருப்பதை அனைவரும் உணர முடியும்.

எனவேஎமது இனத்தின்சார்பாக அவர்களுக்கு எதிரான கடுமையான ,நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு களம் இறங்கும் எமக்கு சகலவிதமான ஒத்துழைப்புக்களையும் உங்கள் அனைவரிடமும் எதிர்பார்க்கின்றோம் என எல்லாளன் படை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4-8)

## English Smiles at Jaffna Hindu

I wish to convey my heartiest congratulations to the under mentioned studentes of mine who performed well in general English in the recent A/L examination conducted by the commissioner of exams.

*K.Niruthan -A, K.Tharshanan -A, S.Mayooran -B S.Thilak -B*

Also my best wishes go to others who have obtained credits and ordinary passes in this exam. and to those who were unable to reach the target may do better in the future exams.

**Three hearty cheers for J.H.C A/L Heroes**

*S.Mayooran Rank - 1 island wide Maths group*
*P. Sivapalan Rank - 2 island wide Bio group*
*N.Banukoban Rank - 4 island wide Maths group*
*S.Thaneshan Rank -5 island wide Maths group*

*T.Sivaparamsothy*
English Teacher A/L 2005 Batch


இரத்ததானம் உயிர் காக்கும் உன்னதபணி

குருதிக்கொடையாளர் தினம் செப்டெம்பர் 21

குருதிக் கொடையாளர்கள்

நோயாளர்களுக்கு பயன்படுத்துவதற்காக இரத்தம் வழங்குப வர்கள் குருதிக் கொடையாளர்கள் எனப்படுவர்.

இவர்கள் ஆரோக்கியமானவர்களாகவும், உடல் நிறை 50 கி.கி மேற்பட்டவராகவும், வயது 18-60 வரையிலும், இரத்ததானம் வழங்கும் நாள் அன்று உணவு உட்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆண் பெண் இருபாலாரும் எவ்வித பாதிப்பும் இல்லாது நான்கு மாதத்திற்கு ஒருதடவை இரத்தானம் செய்யலாம்

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

இன்று ஆரம்பம்
DAY CLASS
(கலைப்பிரிவு) காலை –8மணி
DMI JAFFNA

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஜெயம் புகழ் ரவி
ரேணுகா மேனன் நடித்த
தாஸ்
கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)

மனோகரா
புதிய வெளியீடு
சிம்பு, கோபிகா
மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா

கா.நே: 10.30,2.30,6.30,9.30

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
சத்தியராஜ், சிபி, சதா, வடிவேலு
மற்றும் பலர் நடித்த
மண்ணின் மைந்தன்
கா.நே: 10.30,2.30,6.30,9.30(பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.